பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 பங்குனி 03 செவ்வாய்க்கிழமை 16.03.2021 கதிர் 131

இது ரகசியம் அல்ல!

ஜெனிவா விவகாரத்தை ஒட்டி மாறி மாறி சேறு வாரிப்பூசல் அரங்கேறுகின்றது. சுமந்திரன் தரப்பும் கஜேந்திரகுமார் அணியும் மாறி மாறி அள்ளி வீசும் நீண்ட குற்றச்சாட்டுப் பட்டோலையைப் பார்த்து மக்கள் திகைத்துப்போய் நிற்கின்றார்கள்.

பக்கம்02

# தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு வழங்க முடியுமென்றால் பஸிலை ஆதரிக்கத் தயார்

## கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் எம்.பி. அதிரடி அறிவிப்பு





இலங்கையில் 2024 ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் பஸில் ராஜபக்ஷவால் தமிழர்களின் அரசியல் பிரச்சினைக்குத் தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்கும் தேர்தல் விஞ்ஞாபனம் முன்வைக்கப்படுமாக இருந்தால் அவரை ஆதரிக்கத் தயார்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம். ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

கொழும்பு சிங்கள ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது கோட்டாபய ராஜபக்ஷ

2

# யாழில் நாளையும் மட்டக்களப்பில் வெள்ளியும் சர்வதேச நீதி கோரி மாபெரும் போராட்டங்கள்!

## மக்கள் பேரெழுச்சி இயக்கம் அழைப்பு

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

தமிழ் இனத்தின் மீதான இனவழிப்புக்கு சர்வதேச நீதி கோரி தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கில் தொடர்ச்சியாக நடைபெற்று வரும் சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டங்களுக்கு வலுச்சேர்க்கும் வகையில் யாழ். நல்லூரிலும், மட்டக்களப்பிலும் முன்னெடுக்கப்படவுள்ள கவனயீர்ப்புப் போராட்டங்களுக்கு ஆதரவளிக்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை (P2P) மக்கள் பேரெழுச்சி இயக்கம் இந்த அழைப்பை விடுத்துள்ளது.

2

## வடக்கில் மேலும் 7 பேருக்கு கொரோனா

(எஸ்.நிதர்ஷன்)

வடக்கு மாகாணத்தில் மேலும் 7 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று நேற்று உறுதி செய்யப்பட்டது. இவர்களில் 6 பேர் மன்னார் மாவட்டத்தில்

2

## யாழ். வயோதிபப் பெண் உள்ளிட்ட மேலும் ஐவர் கொரோனாவால் பலி

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் ஐவர் உயிரிழந்துள்ளனர்.

மூன்று பெண்களும், இரு ஆண்களுமே இறுதியாக உயிரிழந்துள்ளனர். இதன்படி நாட்டில் கொரோனாவால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை

2

## கோட்டாபய திருடன் அல்லர்; ரணிலும் சஜித்துமே கள்ளர்கள்

### ரத்நாயக்க விளாசல்



போலிச் செய்திகளை சமூகமயப்படுத்துவதில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கைதேர்ந்தவர் என்று வனவிலங்கு மற்றும் வன பாதுகாப்பு அமைச்சர் சி.பி.ரத்நாயக்க நேற்று தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போதைய

11

## வடக்கு சுகாதாரத் தொண்டர்கள் ஏ - 9 வீதியை மறித்து போராட்டம்

### சிலர் மயக்கமடைந்த நிலையில் வைத்தியசாலையில்




(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணத்தில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் வடக்கு மாகாண சுகாதாரத் தொண்டர்கள் நேற்று யாழ் – கண்டி பிரதான வீதியை மறித்துப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமது நிரந்தர நியமனத்தை

2

## ஜெனிவாப் பிரேரணைக்கு எதிராக இத்தாலியில் ஆர்ப்பாட்டப் பேரணி

### அங்குள்ள இலங்கை சிங்களவர்கள் முன்னெடுப்பு



ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை மீது முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையைக் கண்டித்தும் இத்தாலி

2

# பாதுகாப்புச் சபைக்குக் கொண்டு போகாமலேயே சர்வதேச நீதிமன்றில் இலங்கையை நிறுத்தலாம்!

## சுமந்திரன் அதை மறைக்கின்றார் என்கிறார் கஜேந்திரகுமார்





(எஸ்.நிதர்ஷன்)

பொறுப்புக்கூறல் என்ற விடயத்தை சர்வதேச நீதிமன்றிற்கு கொண்டு செல்வதனூடாகவே அடைய முடியுமென பத்து வருடங்களுக்கு மேலாக நாம் கூறி வருகின்ற போதும் அதற்கான சாத்தியங்கள் இல்லை எனக் கூறி அதற்கு கூட்டமைப்பினர் தடையை ஏற்படுத்தி ஆட்சியாளர்களை தொடர்ந்தும் பாதுகாத்து வருகின்றனர் எனத் தெரிவித்துள்ள தமிழ்த் தேசிய மக்கள்

11

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அது ஒருபுறம் நடக்கட்டும். மறுபுறத்தில் அரங்கேறும் சில விடயங்களையும் நாம் கவனத்தில் கொள்வது நல்லது.

இலங்கைக்கு எதிராக பிரிட்டன், கனடா, ஜேர்மனி உட்பட்ட தரப்புகள் சமர்ப்பித்த பிரேரணை வரைவு இப்போது இறுதி செய்யப்பட்டு விட்டது. 22ஆம் திகதி அல்லது 23ஆம் திகதி அதன் மீது வாக்கெடுப்பு.

இந்தப் பிரேரணை வரைவு முதல் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அதில் முக்கியமான விடயம் ஒன்று கடந்த வாரத்தில் உள்புகுத்தப்பட்டது. அது குறித்து தமிழ் ஊடகங்கள் அதிகம் அலட்டிக் கொள்ளவில்லை. ஆனால் அது மிக முக்கியமான அம்சம்.

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பான சாட்சியங்களை – சான்றாதாரங்களை – சேகரிப்பது, ஆய்வு செய்து, ஒன்றிணைத்துப் கையாள்வதற்கான பொறிமுறை ஒன்றை – மத்திய தகவல் சான்றுகள் களஞ்சியம் ஒன்றை – பேணுவது என்ற விடயம் அந்தப் பிரேரணையில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கையில் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக ஐ.நா. அங்கத்துவ நாடுகள் ஒவ்வொன்றும் தமக்குரிய உலகளாவிய நியாயாதிக்கத்தின் கீழ் வழக்குத் தொடுக்கும் போது அந்தந்த நாடுகளுக்கு இத்தகைய இரகசிய சான்றாதாரங்களை நேரடியாக வழங்கி உதவுவதற்காக இந்தப் பொறிமுறை ஏற்படுத்தப்படுகின்றது.

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலிற்கு வரும் இலங்கை தொடர்பான பிரேரணையில் இந்த விவகாரம் பெரும் ஆரவாரமின்றி புதிதாகப் சேர்க்கப்பட்டு உள்ளடக்கப்பட்டிருக்கின்றது.

இலங்கையில் யுத்தக் குற்றங்களில் ஈடுபட்டவர்கள் என்று சந்தேகிக்கப்படுவோர், குற்றச்சாட்டுக்கு இலக்கானோர், வெளிநாடுகளுக்குக் காலடி எடுத்து வைத்தால் அந்தந்த நாடுகளில் அவர்களை மடக்கி, நீதியின் முன் நிறுத்துவதற்கான – கனகச்சிதமான – ஏற்பாடே ஒழுங்குமுறையாக இந்தப் பொறிமுறை மூலம் செய்யப்படுகின்றது.

இத்தகைய பொறிமுறை ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் ஊடாகச் செயற்படுத்துவதாயின் அதற்கு ஆளணி, அம்பு தேவை. நிதி தேவை.

முதல் ஒன்றரை வருடங்களுக்கு அதைக் கொண்டு நடத்துவதற்கு – சுமார் பத்து நிபுணர்களின் பங்களிப்புடன் அதைச் செயற்படுத்துவதற்கு – ஆரம்பக் கட்டத்தில் இரண்டு மில்லியன் அமெரிக்க டொலர்கள் (சுமார் நாற்பது கோடி ரூபா) தேவைப்படும என மதிப்பிடப்பட்டது.

ஆஸ்திரேலியா போன்ற நாடு ஒன்று அதற்கான நிதியை வழங்குவதற்குத் தயார் என்பது உறுதிப்படுத்தப்பட்டவுடன் அந்தப் பொறிமுறையை உருவாக்குவது தொடர்பான வாசகம் பிரேரணை வரைவில் சேர்த்து கொள்ளப்பட்டது.

இப்போதைய நகல் பிரேரணை இதே வடிவத்தில் நிறைவேற்றப்பட்டு, தீர்மானமாக அங்கீகரிக்கப்படுமானால், உடனடியாக இந்த மத்திய தகவல் சான்றுகள் களஞ்சியத்தை உருவாக்கி நடைமுறைப் படுத்தும் நடவடிக்கை மிக மும்முரமாக முன்னெடுக்கப்படும். உரிய அதிகாரிகள் விரைந்து செயற்படுவார்கள் என்றும் கூறப்பட்டது.

இந்தத் தகவல் களஞ்சியம் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலை ஒட்டி இம்முறை ஸ்தாபிக்க இணக்கம் காணப்படுமாயின், இலங்கை இராணுவத்தில் யுத்தக் குற்றங்கள் இழைத்தவர்கள் என்று பட்டியலிடப்பட்டோர் நாட்டுக்கு வெளியே சென்று வருவது பெரும் சிரமமானதாகவும், ஆபத்தானதாகவும் அமையும்.

வெளிப்பார்வைக்கு இலங்கை விடயம் நேரடியாக ஐ.நா. பாதுகாப்புச் சபைக்கோ அதன் மூலம் சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கோ செல்லாவிட்டாலும் –

யுத்தக் குற்றங்களை இழைத்தோர் எனப் பட்டியலிடப்பட்டோர் கால் வைக்கும் வெளிநாடுகளில் எல்லாம் சிறைக்கம்பிகளுக்குப் பின்னால் நிறுத்தப்படும் பேராபத்து எழுந்துள்ளது என்பது மறுக்கக் கூடியதல்ல.

இந்தப் பொறிமுறை இலங்கை யின் 'தேசிய கதாநாயர்களை' அவர்கள் கால் வைக்கக் கூடிய மேற்குலக நாடுகளில் 'தேசிய வில்லன்கள்' ஆக மாற்றிவிடும்...!

– மின்னல் –

## வடக்கு சுகாதாரத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யுறுத்தி வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்துக்கு முன்பாக தொடர்ந்தும் 8 ஆவது நாளாக நேற்று அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில், நேற்று அவர்கள் யாழ்ப்பாணம் – கண்டி பிரதான வீதி மற்றும் ஆளுநர் செயலக நுழைவாயிலை மறித்தும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது போராட்டத்தில் ஈடுபட்ட சிலர் மயக்கமடைந்து விழுந்த நிலையில் உடனடியாக அவர்கள் அம்புலன்ஸ் மூலம் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அழைத்து செல்லப்பட்டனர்.

கடந்த முதலாம் திகதியில் இருந்து போராட்டத்தில் ஈடுபட்டு வந்த வடக்கு மாகாண சுகாதார தொண்டர்கள் தமக்கான தீர்வு வழங்காத நிலையில் கடந்த 8ஆம் திகதி தொடக்கம் உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

## வடக்கில் மேலும் 7...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அடையாளம் காணப்பட்டனர் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்த தாவது:–

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக மருத்துவபீட ஆய்வுகூடத்தில் நேற்று 295 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இவர்களில் எவருக்கும் தொற்று இல்லை.

இதேவேளை, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று 457 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இவர்களில் 7 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் 5ஆம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த 65 வயது வயோதிபர் ஒருவர் கொரோனாத் தொற்று அறிகுறிகளுடன் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். இவர் வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்டு பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார். இவருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

மன்னார் மீன்சந்தை தொற்றாளர்களுடன் தொடர்புடையோர் சுயதனிமைப்படுத்தப்பட்டனர். இவர்களில் ஒரு பகுதியினருக்கு முன்னெடுக்கப்பட்ட பரிசோதனையில் ஐவருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

மேலும், மன்னார் பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கும் தொற்று கண்டறியப்பட்டது – என்றார்.

## தமிழர்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முன்வைத்த தேர்தல் விஞ்ஞாபனத்தை விடவும் சஜித் பிரேமதாஸவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழர்களின் அரசியல் பிரச்சினைகள் குறித்த தெளிவான வேலைத்திட்டம் இருந்தது.

அதேபோல் சஜித்துடன் பேச்சுகளை நடத்தியவேளை வடக்கு, கிழக்கு மக்களின் பிரதான பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும் என்பதே அவரின் எதிர்பார்ப்பாக இருந்தது. அதனால் அவரை ஆதரித்தோம். ஆனால், துரதிஷ்டவசமாக அவர் வெற்றிபெறவில்லை.

ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் புதிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைச் சந்தித்து நாம் பேச்சுகளை நடத்தியிருந்தோம். இதன்போது உங்களால் மட்டுமே தமிழர்களின் அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்க முடியும் என்பதை நான் நேரடியாகக் குறிப்பிட்டிருந்தேன். ஏனெனில் சிங்கள மக்கள் எதிர்க்காத ஒரே தலைவர் என்ற காரணத்தால் அவர் எடுக்கும் தீர்மானங்கள் நாட்டில் குழப்பங்களை ஏற்படுத்தாது.

நான் கூறியதை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஏற்றுக்கொண்டபோதும், இன்னமும் தீர்வுகளை வழங்க அவர் முன்வரவில்லை – என்றார்.

# சகல இன மக்களும் சம உரிமை பெற்றவர்களாக வாழ வேண்டும்

## ஐக்கிய மக்கள் சக்தி மாநாட்டில் சஜித் உரை





இலங்கையில் வாழும் அனைத்து இன மக்களும் சம உரிமை பெற்றவர்களாக வாழ வேண்டும். அதற்கு ஏற்ற சூழல் உருவாக்கப்பட வேண்டும். அப்போது தான் தேசிய பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும்.

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் முதலாவது மாநாடு நேற்று கொழும்பில் நடைபெற்றது. மாநாட்டில் தலைமையேற்று உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்த தாவது:–

மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி அம்மக்களை வறுமையில் இருந்து மீட்டெடுக்க வேண்டும். அவர்களை சிறு தோட்ட உரிமையாளர்களாக்குவோம்.

மாகாண சபைகளுக்கான தேர்தலை எதிர்கொள்வதற்கு எமது கட்சி தயார். ஊழல் வழியில் பயணிக்கும் இந்த அரசுக்கு உரிய பதிலை வழங்குவதற்கு மக்களும் தயாராக வேண்டும்.

2025ஆம் ஆண்டு ஐக்கிய மக்கள் ஆட்சியின்கீழ்தான் கட்சி மாநாடு நடைபெறும். அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் நிச்சயம் வெற்றி பெறுவோம் – என்றார்.

# மாகாண சபைகளுக்கான தேர்தல்; அரசின் இறுதி நிலைப்பாடு என்ன?

## ஜே.வி.பி. பகிரங்கக் கேள்வி

மாகாண சபைகளுக்கான தேர்தல் தொடர்பில் தனது உறுதியான – இறுதியான நிலைப்பாடு என்னவென்பதை அரசு உடன் அறிவிக்க வேண் டும் என்று ஜே.வி.பி. வலியுறுத்தியுள்ளது.

ஜே.வி.பியின் ஊடகவியலாளர் மாநாடு கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போது மாகாண சபைகளுக்கான தேர்தல் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விஜித ஹேரத் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

மாகாண சபைத் தேர்தல் எப்போது, எந்த முறைமையின் கீழ் நடத்தப்படும் என்பது தொடர்பில் அரசு இன்னும் தனது நிலைப்பாட்டை அறிவிக்கவில்லை. ஆனாலும், அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டம் அமுலாக வேண்டும் என ஜெனிவாவில் இந்தியா வலியுறுத்திய போது, எதிர்வரும் ஜூன் மாதம் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும் என்ற தகவலை அரசு வெளியிட்டிருந்தது. அதன் பின்னர் அந்த அறிவிப்பு மாயமானது. தற்போது மீண்டும் கருத்து வெளியிடப்பட்டு வருகின்றது.

எனவே, மாகாண சபைத் தேர்தல் எப்போது, எந்த முறைமையின் கீழ் நடத்தப்படும் என்பது தொடர்பான தனது உறுதியான – இறுதியான நிலைப்பாட்டை அரசு விரைவில் அறிவிக்க வேண்டும் – என்றார்.

## யாழில் நாளையும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது தொடர்பில் அந்த இயக்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

தமிழ் இனத்தின் மீதான இனவழிப்புக்கு சர்வதேச நீதி கோரி தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கில் தொடர்ச்சியாக நடைபெற்று வரும் சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டங்களுக்கு வலுச்சேர்க்கும் முகமாக வடக்கு, கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களின் ஏற்பாட்டில் யாழ். நல்லார் – கிட்டு பூங்காவிலிருந்து நாளை 17ஆம் திகதி புதன் கிழமை காலை 10 மணிக்கும், பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சி இயக்கத்தின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு காந்தி பூங்காவிலிருந்து எதிர்வரும் 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கும் கவனயீர்ப்புப் போராட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

கீழ்வரும் இரண்டு முதன்மைக் கோரிக்கைகளை முன்னிலைப்படுத்தியே இந்தப் போராட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

01) இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் பாரப்படுத்த வேண்டும்.

02) தமிழர்களுடைய மரபுவழித் தாயகம், தமிழ் தேசியம், சுயநிர்ணய உரிமை போன்ற நீண்டகால அடிப்படை உரிமைக் கோரிக்கைகள் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

தமிழ் மக்களின் நீதி மற்றும் உரிமைகளுக்கான இந்தப் போராட்டங்களுக்கு வலுச்சேர்க்குமாறு மதத்தலைவர்கள், தமிழ்த் தேசிய கட்சிகள், சிவில் சமூக அமைப்புகள், சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகிய அனைத்துத் தரப்பினிடமும் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை (P2P) மக்கள் பேரெழுச்சி இயக்கம் அன்புரிமையுடன் கேட்டுக்கொள்கின்றது – என்றுள்ளது.

## யாழ்.வயோதிபப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

532 ஆக அதிகரித்துள்ளது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 86 வயதான பெண் ஒருவர், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், கடந்த சனிக் கிழமை உயிரிழந்துள்ளார்.

கம்பஹா பகுதியைச் சேர்ந்த 76 வயதான பெண் ஒருவர், கொழும்பு தேசிய தொற்று நோயியல் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், கடந்த சனிக்கிழமை உயிரிழந்துள்ளார்.

கொழும்பு, கொச்சிக்கடைப் பகுதியைச் சேர்ந்த 61 வயதான ஆண் ஒருவர், கொழும்பு வடக்கு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், கடந்த 8ஆம் திகதி உயிரிழந்துள்ளார்.

பமுனுகம பகுதியைச் சேர்ந்த 78 வயதான ஆண் ஒருவர், அவரது வீட்டில் கடந்த 10ஆம் திகதி உயிரிழந்துள்ளார்.

களுத்துறைப் பகுதியைச் சேர்ந்த 94 வயதான பெண் ஒருவர், ஹோமாகம வைத் தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

## ஜெனிவாப் பிரேரணைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யில் உள்ள இலங்கையர்கள் ஆர்ப்பாட்டப் பேரணியை நேற்று முன்னெடுத்தனர்.

இத்தாலியின் மிலானோ நகர ரயில் நிலையத்துக்கு முன்னால் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஐ.நா. மனித உரிமைகள் சபை, இலங்கையின் உள்ளக விடயங்களில் தலையிடக் கூடாது என்றும், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் இலங்கை தொடர்பான அறிக்கை பக்கச்சார்பானது என்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

இத்தாலியில் கொரோனா பரவல் தீவிரமடைந்துள்ள நிலைமையிலும், அங்குள்ள இலங்கையைச் சேர்ந்த சிங்களவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

# மக்களைத் தூண்டி வீதியில் நின்று கூச்சல் போடும் கலாசாரத்தால் எதனையும் சாதித்து விட முடியாது!

## நஸீர் அஹமட் கூறுகிறார்



உணர்ச்சிவசமாக மக்களைத் தூண்டி விட்டு வீதியில் நின்று கூச்சல் போடும் கலாசாரத்தால் எதனையும் சாதித்து விட முடியாது என மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

இதயங்களை ஒன்றிணைக்கும் கிராமிய பாலத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு ஏறாவூர் முனையவளவு பிரிவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் -

உணர்ச்சிவசமாக மக்களைத் தூண்டி விட்டு வெளியில் நின்று வீதியில் நின்று கூச்சல் போடும் கலாசாரத்தால் எதனையும் சாதித்து விட முடியாது என்ற யதார்த்தத்தை நாம் புரிந்து கொண்டாக வேண்டும்.

மக்களை உணர்ச்சியூட்டியே இன்று மக்களை தொல்லைக்குள்ளாக்கிக் கொண்டிருக்கும் கலாசாரத்தை ஒழிக்க வேண்டும். 70 வருடங்களுக்கு மேலாக போராடிய சிறுபான்மை இனம் சாதித்தது என்ன என்ற கேள்வியும் தற்போது பரவலாக எழுப்பப்படுகிறது.

ஆனால் அன்றிருந்த சிறுபான்மைத்தலைவர்கள் பலர் சாணக்கியமாகக் காய் நகர்த்தி விடயங்களைச் சாதித்தார்கள். அதனைக் கூட இன்று செய்ய முடியா மல் உள்ளது. கடந்த கால வரலாறுகளைப் பார்த்து நாங்கள் படிப்பினை பெற்றுக் கொள்ள வேண்டும்.

ஆகவே, எந்தெந்த காலப்பகுதியிலே எவ்வாறான அரசியல் கலாசாரங்கள் ஆளுகை செலுத்துகின்றன என்பதை அறிந்து கொண்டு சிறுபான்மைச் சமூகங்கள் சாணக்கியமாக காய் நகர்த்தி காரியங்களைச் சாதிக்க வேண்டும். இதுதான் காலத்தின் தேவையாக இருக்கிறது. - என்றார்.

நிகழ்வில் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கிழக்கு மாகாணப் பணிப்பாளர் கலைவாணி வன்னியசிங்கம் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியலாளர்கள், ஏறாவூர் நகர சபையின் தலைவர் எம்.எஸ். நழீம், மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் அதிபர் எம்.சி. ஜுனைட், ஏறாவூர் வர்த்தகர் சங்கத் தலைவர் செய்னுலாப்தீன் ஆலிம் இனஷாயத்துல்லாஹ் ஏறாவூர் நகர சபையின் வட்டார உறுப்பினர் ஏ.எஸ்.எம். ஸரூஜ் ஏறாவூர் நகர சபையின் முன்னாள் தவிசாளர்கள் பலர் உட்பட பிரமுகர்களும் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

# நான்காவது பிராந்திய தூதரக அலுவலகத்தை திருமலையில் வெளிவிவகார அமைச்சு திறப்பு





திருகோணமலை, மார்ச் 16

வெளிநாட்டு உறவுகள் அமைச்சின் நான்காவது பிராந்திய தூதரக அலுவலகம் திருகோணமலையில் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

இந்த அலுவலகம், வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தனவால் கடந்த ஞாயிற்றுக்கிழமை திறந்துவைக்கப்பட்டது.

இந்நிகழ்வில், பிராந்திய ஒத்துழைப்பு இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய, நாடாளுமன்ற உறுப்பினர்களான கபில நுவன் அத்துகோரல, எம்.எஸ்.தௌபீக், இராசமாணிக்கம் சாணக்கியன், யதாமணி குணவர்தன, வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் அட்மிரல் கொலம்பகே உட்பட அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

'அரச நிறுவனங்களின் செயற்பாடுகளைக் கிராமங்களுக்கும் கொண்டுசெல்லல்' என்ற அரசாங்கத்தின் திட்டத்திற்கமைய மக்களுக்கு இலகுவான முறையில் சேவைகளைப் பெற்றுக்கொடுக்கும் வகையில் இந்தப் பிராந்திய தூதரக அலுவலகம் திறந்துவைக்கப்பட்டதாக அமைச்சர் தினேஷ் குணவர்தன குறிப்பிட்டுள்ளார்.

மேலும் குறிப்பிட்டுள்ள அவர் -

கடந்த காலங்களில் வெளிநாட்டு உறவுகள் அமைச்சின் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக திருகோணமலைப் பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் பல மணித்தியாலங்களைச் செலவிட்டு கொழும்புக்குச் சென்று சேவைகளைப் பெற்றுக் கொண்டார்கள். இதன்காரணமாக பல்வேறு வகையான சிரமங்களை எதிர்நோக்க வேண்டி ஏற்பட்டது.

எனவேதான், கிழக்கு மாகாண மக்களுக்குக் குறித்த சேவையைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் திருகோணமலையில் பிராந்திய அலுவலகம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, திருகோணமலை மாவட்டம் ரம்மியமான பிரதேசமாகக் காணப்படுவதுடன் அதிகளவான வளங்கள் நிறைந்த மாவட்டமாகக் காணப்படுகின்றது. திருகோணமலை மாவட்டத்தைப் பொருளாதாரக் கேந்திர நிலையமாக, நாட்டின் அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்கின்ற மாவட்டமாக மாற்றியமைப்பதற்கான செயற்பாடுகளை அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பெருந்தோட்ட தொழிலாளர் சலுகை இல்லாமல் போகும் அபாய நிலை!

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா கிடைத்துவிட்டது என சிலர் பெருமையடைகின்றனர். ஆனால் தொழில் சலுகைகள் இல்லாமல்போகும் அபாயம் ஏற்பட்டுள்ளதென ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பழனி திகாம்பரம் கவலை வெளியிட்டுள்ளார்.

ஹற்றனில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த நிகழ்வில் பழனி திகாம்பரம் மேலும் கூறியுள்ளவை வருமாறு -

'வேலை நேரம், வாக்குரிமை உட்பட தமக்கான உரிமைகளை பெண்கள் போராடியே வென்றெடுத்தனர்.

எனவே, பெண்களுக்கான உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பது உட்பட பல விடயங்களை முன்னிறுத்தி மார்ச் 8ஆம் திகதி சர்வதேச மகளிர் தினம் நினைவுகூரப்படுகின்றது.

ஒவ்வொரு ஆணின் வெற்றியின் பின்னாலும் ஒரு பெண்ணின் பங்களிப்பு நிச்சயம் இருக்கின்றது. எனவே பெண்களுக்கான உரிய அங்கீகாரத்தை நாம் வழங்க வேண்டும்.

தொழிலாளர் தேசிய முன்னணியின் பொதுச்செயலாளராக பெண் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். அது தற்காலிக நியமனம் அல்ல. அப்பதவியில் அவரே நீடிப்பார்.

அதுமட்டுமல்ல உள்ளூராட்சி மன்றங்களிலும்நாம்பெண்களுக்குஇடஒதுக்கீடுகளை வழங்கியுள்ளோம். உலகில் பல நாடுகளில் பெண்கள் உயர் பதவிகளை வகிக்கின்றனர். சில நாடுகளை பெண்கள் ஆள்கின்றனர்.

எமது பெண்களின் வாழ்வும் மேம்பட வேண்டும். அதற்காகநாம்குரல்கொடுப்போம். குறிப்பாக பெருந்தோட்ட பெண் தொழிலாளர்கள் சம்பளத்துக்காககூட போராடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

ஆயிரம் ரூபா பெற்றுக்கொடுத்துவிட்டோம் என சிலர் கொக்கரிக்கின்றனர். ஆனால் 12 அல்லது 15 நாள்கள்தான் வேலை வழங்கப்படும் எனவும் தொழிலாளர்களுக்கான சலுகைகள் இல்லாமல்போகும் எனவும் கம்பனிகள் கூறுகின்றன.

இதனால் ஏற்படும் பிரச்சினைகளுக்கு எவ்வாறு முகங்கொடுப்பது? எமது மக்களுக்கு உழைப்புக்கேற்ற ஊதியம் வேண்டும். எனவே, அவர்களை சிறுதோட்ட உரிமையாளர்களாக்க வேண்டும்' என அவர் குறிப்பிட்டுள்ளார்.




இலவசம் என்றால் எல்லோருக்கும் விருப்பம் சும்மா கிடைப்பது இரட்டிப்பு மகிழ்ச்சி,சொகுசாக வாழ்வது சுதந்திரம் போன்றது.மனங்கோணாது கொடுப்பது என்பது பலருக்கு பாவக்காய் சாறு குடிப்பதைப் போன்றது.உதவுதல் என்பது உபத்திரம் போன்றது.துன்பமில்லாமல் கஷ்டமில்லாமல் வாழ்வது பலருக்கு பிடிப்பானதாகும். ஆனால் இங்கு தான் பாவமும் நோயும் பதுங்கி இருக்கின்றன. படுகுழியும் பள்ளங்களும் ஒழிந்து இருக்கின்றன.

இயேசு கூறுகின்றார் ஒடுக்கமான வாயில் வழியே நுழையப் பாடுபடுங்கள்.அழிவுக்குச் செல்லும் வழியே அகன்றது.அதன் வழியே தான் பலர் செல்ல விரும்புவார்கள் விட்டில் பூச்சிகள் விளக்கில் விழும்வரை அவற்றுக்கு விளக்கானது மகிழ்வின் அடையாளமாகவே தெரியும்.சோம்பிக் கிடப்பது சொர்க்கம் போல தோன்றினால் சோற்றுக்கு வழியில்லாமல் போகும்.

இருப்பதைப் பகிர்ந்து,இல்லார்க்கு உதவி நோயாளர்களைச் சந்திக்கு,ஏழைகள் வாழ்வுயரப் பாடுபடுகின்றவர்கள் மனம் மகிழ்வோடு வாழ்வார்கள்.இன்று,போர்களாலும் இடப்பெயர்வுகளாலும் பல்வகையான அடக்குமுறைகளாலும் மக்கள் நிம்மதியாக வாழ முடியாதவர்களாக,நிரந்தரத் தொழில் இல்லாதவர்களாக,உடல் ஊனமுற்றவர்களாக,அன்றாடத் தேவைகளை நிறைவு செய்ய முடியாதவர்களால் பல ஆயிரம் பேர் வாழிடம் தெரியாதவர்களாக அலைந்து திரிகின்றார்கள் பலர் மௌன ஏதிலிகளாகவும் வாழ்வைக் கழிக்கின்றார்கள்.இருப்பவர் பங்குபோடுவதை விட இல்லாதவர்க்கு உதவுவதே மனிதாபிமானமாகும் அடுக்கி அடுக்கி களஞ்சியங்களைப் பெரிதாக்குவதை விட அநாதைகளையும் கண்ணோக்குவது அமைதி வாழ்வைத் தரும் சேர வேண்டியவர்க்குச் சேரும் போதே அது உதவியாகின்றது.சேர்த்து வைத்தவர்க்கும் சேரும் போது அது கைமாறு ஆகின்றது.அது திரும்பவும் கொடுப்பவர்க்கு வந்து சேரலாம்.

முப்பத்தெட்டு ஆண்டுகள் உடல்நலமற்றிருந்த ஒருவர் சுகம் பெறக் காத்திருந்தார் அவருக்கு உதவிட யாரும் முன்வரவில்லை. எருசலேமிலுள்ள பெத்சாயிதா என்ற குளத்தில் தேவ தூதன் சில வேளை வந்து கலக்குவான்.முதலில் இறங்குபவர் குணமடைவர். இயேசு இந்த உடல் நலமற்றவரைக் கண்டார்,அவரது இயலாமையைப் புரிந்து “எழுந்து உம்முடைய படுக்கையை எடுத்துக் கொண்டு நடந்து செல்லும்” என்றார்.அவன் நலம் பெற்று எழுந்து நடந்து சென்றான். எம்முடைய உதவுதலும் இது போன்றதாக அமைய வேண்டும். எம்மால் ஆனதையும்,பிறரிடமிருந்து பெற்றும் உண்மையான தேவையுடையவர்களுக்கு உதவும் போது மனமகிழ்வும் இறைஆசீர்வாதமும் எமக்கு கிடைக்கும் இதை உணர்ந்து மன மாற்றம் பெற்று வாழ்வைச் சீரமைப்போம்.

காலைக்கதிர்
Kalaikkathir

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# மதில் மேல் பூனையாக இந்தியா

ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் திருவிழா எதிர்பார்க்கப்பட்ட உச்சக் கட்டத்தை எட்டி விட்டது.

கொழும்பு அரசு அந்த நெருக்கடியை எப்படி எதிர்கொள்ளப் போகின்றது என்பதுதான் இப்போதைய கேள்வி.

பிரிட்டன், கனடா, ஜேர்மனி, மஸிடோனியா, மொன்ரிநீக்கரோ, மாலாவி ஆகிய நாடுகளின் அனுசரணையுடன் இலங்கைக்கு எதிராக மேற்கு நாடுகள் கொண்டு வந்துள்ள பிரேரணை நிறைவேறியே தீரும். அதற்கான சாத்தியங்கள் சாதகமாக உள்ளன.

ஆனால் மேற்குலகின் இந்த வெற்றி எத்தகையதாக முடியும் என்பதுதான் கேள்வி.

இலங்கையில் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ பெரு வெற்றியீட்டினார். ஆனால் அவரது வெற்றி ஏளனத்துடன் நோக்கப்பட்டது. அதற்கு ஒரு காரணம் இருந்தது.

அது போலவே இப்போது ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கைக்கு எதிரான பிரேரணை மேற்குலகுக்கு வெற்றியைத் தேடித் தருவதாக அமையும். ஆனால் அந்த வெற்றி, அந்தப் பிரேரணையைக் கொண்டு வந்து நகர்த்தும் நாடுகளுக்கு முழுமையான ஒன்றாக அமையாது என்றே தோன்றுகின்றது.

ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷ வென்றார். ஆனால் அவரை இந்த நாட்டின் சிறுபான்மை இனங்கள் – தமிழர்கள், மலையக தமிழர்கள், முஸ்லிம்கள் – ஆதரிக்கவே இல்லை என்பது வாக்களிப்பில் வெட்டவெளிச்சமாகியது. ஆகத் தான் கிளப்பிய பௌத்த, சிங்களப் பேரினவாதத்தை ஏற்று, அதில் திளைத்து நின்ற தென்னிலங்கைப் பேரினவாதிகளின் ஆதரவுடன் மட்டுமே அவர் வென்றார் என்பது இன்று உலகம் ஏற்றுக் கொண்ட செய்தி. அவர் இலங்கையின் சட்டபூர்வ ஜனாதிபதிதான். ஆனால் இந்த இலங்கைத் தீவின் சிறுபான்மையின மக்களினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஜனாதிபதி அல்லர். இலங்கை நாட்டின் சட்டங்களின் மூலமும், பெரும்பான்மையினரின் முடிவே தீர்ப்பு என்ற ஜனநாயகத்தின் கேலிக் கூத்தான பண்பியல்பு காரணமாகவும், இந்த நாட்டின் சிறுபான்மையினர் மீது வல்வந்தமாகத் திணிக்கப்பட்ட ஜனாதிபதியே அவர்.

அதுபோன்றதுதான் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கைக்கு எதிராகத் கொண்டு வரப்படுகின்ற பிரேரணை தொடர்பில் மேற்குலகும் அவர்களுடன் சேர்ந்து தமிழர்களும் பெறப் போகின்ற வெற்றியும் கூட.

யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் யுத்தக் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், இனவழிப்பு நடவடிக்கைகள் புரிந்ததாகக் கூறப்படும் இலங்கை தேசம் இருப்பது தென்னாசிய வட்டகையில்.

இந்தப் பிராந்தியத்தில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இந்தியா, பங்களாதேஷ், நேபாளம், பாகிஸ்தான் ஆகிய நான்கு நாடுகள் உள்ளன. இந்த நாட்டில் எதுவும் இம்முறை இப்பிரேரணை விடயத்தில் அதற்கு ஆதரவாகவும், இலங்கைக்கு எதிராகவும் வாக்களிக்கப் போவதில்லை என்பது பெரும்பாலும் உறுதியாகி விட்டது.

அதாவது, இலங்கைக்கு எதிரான பிரேரணை ஒன்றை ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் மேற்கு நாடுகள் வெற்றிகரமாக நகர்த்தி தீர்மானமாக நிறைவேற்றினாலும் கூட, இலங்கை அமைந்த தென்னாசிய வட்டகைப் பிராந்தியத்தில் இருந்து எந்த நாடும் அந்தத் தீர்மானத்தை ஆதரிக்கவேயில்லை என்ற நிலைமையில்தான் அது நிறைவேற்றப்படும். அத்தகைய வெற்றி, மேற்கு நாடுகளுக்கு திருப்தி தருமா என்பதே கேள்வி. தேவையானால் தீர்மானம் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளதே என்று குறிப்பிட்டு, விழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லை என்ற பாணியில் சமாளிப்பு சல்ஜாப்புகளைக் கூறலாம். அவ்வளவுதான்.

இந்த வட்டகையின் அங்கத்துவ நாடுகள் நான்கில் – பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம் ஆகிய மூன்றும் இலங்கைக்கு எதிரான பிரேரணையை எதிர்த்து – இலங்கைக்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுத்து – வாக்களிக்கும் என்பது பெரும்பாலும் உறுதி.

இந்தியா மட்டும் வழமைபோல மதில்மேல் பூனையாக, வாக்களிப்பில் கலந்து கொள்ளாமைக்கு ஒரு சமாளிப்புக் காரணம் கூறி விட்டு வெளியேறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

*“அயல் தேசங்களின் உறவுக்கு முன்னுரிமை என்பதே இந்தியாவின் வெளியுறக் கொள்கையின் பிரதான அம்சம்”* என்ற கோட்பாட்டியல் ரீதியான தத்துவார்த்த விளக்கத்தை புதுடில்லி தனது முடிவுக்கான நியாயப்பாடாக முன்வைக்கும் என்பதும் எதிர்பார்க்கப்படுவதான்.

ஜெனிவாக் கூட்டத்தில் இலங்கைக்கு தாம் அநீதி இழைக்கப் போவதில்லை என உத்தியோகப்பற்றற்ற கலந்துரையாடலில் இந்தியப் பிரதிநிதி தெரிவித்திருப்பது இதனைத்தான்.

# காணாமல் ஆக்கப்பட்டோர் எங்கே?

## திருமலையில் உறவுகள் கவனயீர்ப்புப் போராட்டம்





காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் கவனயீர்ப்புப் போராட்டம் இன்று திருகோணமலையில் முன்னெடுக்கப்பட்டது.

திருகோணமலை, சிவன் கோவில் முன்றிலில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் முப்பதுக்கும் மேற்பட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் கலந்துகொண்டனர்.

இதன்போது, அரசியல் கைதிகளை விடுதலை செய், ஐ.நாவே சிறந்த தீர்வைப் பெற்றுத்தா, காணாமல் ஆக்கப்பட்டோர் எங்கே? போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டக்காரர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# ராஜபக்ஷ அரசை விரட்டியடிப்போம்

## பொன்சேகா எம்.பி. சூளுரை; முரளியையும் வறுத்தெடுப்பு



முத்தையா முரளிதரன் இலங்கை அணிக்காக விளையாடியபோது அவரது பந்து வீச்சைப் பார்த்து மகிழ்ந்தோம்; பாராட்டினோம். ஆனால், இன்று ராஜபக்ஷக்களுக்கு சோரம்போகும் விதத்தில் அவர் பந்து வீசுகின்றார். முரளிக்கு 2 ஏக்கர் காணியை அரசு வழங்கியுள்ளது.

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் முதலாவது மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே பொன்சேகா, முரளி மீது விமர்சனக்கணைகளைத் தொடுத்தார்.

அத்துடன் இந்த அரசை வீட்டுக்கு விரட்டியடிப்போம். எமது பக்கம் பலமானதொரு அணி இருக்கின்றது. 2025ஆம் ஆண்டளவில் ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியமையும் எனவும் சரத் பொன்சேகா சூளுரைத்தார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர மீதும் அவர் கடும் விமர்சனங்களை முன்வைத்தார்.

# ஈழத் தமிழ் அகதிகளுக்கு இந்திய குடியுரிமை தி.மு.கவின் தேர்தல் விஞ்ஞாபன அறிக்கை!

இலங்கையில் இருந்து தமிழகம் திரும்பிய மலையகத் தமிழர்கள், தமிழகத்தில் 30 ஆண்டுகளுக்கு மேலாக அகதிகள் முகாமில் வசிக்கும் இலங்கைத் தமிழர் ஆகியோருக்கு இந்திய குடியுரிமை வழங்க மத்திய அரசை திராவிட முன்னேற்றக் கழகம் வலியுறுத்தும் என அதன் தலைவர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டமன்றத் தேர்தலுக்கான திராவிட முன்னேற்றக் கழகத்தின் விஞ்ஞாபன அறிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை போர்க்குற்றங்கள், இனப் படுகொலை தொடர்பான சுதந்திரமான – நம்பகத்தன்மை வாய்ந்த சர்வதேச விசாரணை நடத்த உலக நாடுகளை இந்திய அரசு வலியுறுத்திச் செயல்பட வேண்டும் என மத்திய அரசைதி.மு.கவலியுறுத்தும்

இலங்கை தமிழர் சிக்கலுக்கு தீர்வு காண இலங்கையில் உள்ள தமிழர், புலம்பெயர் இலங்கை தமிழரிடையே ஐ.நா. மேற்பார்வையில் பொதுவாக்கெடுப்பு நடத்த வேண்டும்.

தாயகம் திரும்பிய இந்திய வம்சாவழியினராகிய மலையகத் தமிழர்கள், 30 ஆண்டுகளுக்கு மேலாக அகதிகள் முகாம்களில் இருக்கும் இலங்கைத் தமிழர்களுக்கும் இந்திய குடியுரிமை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மதரஸா பாடசாலைகள் விவகாரம்: தலையிட அரசுக்கு உரிமையுண்டு!

## கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கூறுகிறார்



இனங்களுக்கு இடையிலான பிரிவை ஏற்படுத்தல், நாட்டின் ஒற்றுமை மற்றும் அமைதிக்கு அச்சுறுத்தல் போன்ற வகையில் நடத்தப்பட்டால் மதரஸா பாடசாலை விடயத்தில் தலையிட அரசாங்கத்துக்கு உரிமை உண்டு என கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

கல்வி அமைச்சில் நேற்று (திங்கட்கிழமை) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்து வெளியிட்ட அவர், நாடு முழுவதும் சுமார் 1,965 மதரஸா பாடசாலைகள் இருக்கின்றன எனவும் எதிர்காலத்தில் இந்த பாடசாலைகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறினார்.

இதேவேளை, குறித்த பாடசாலைகளில் கற்பித்தல் நடவடிக்கையை மேற்கொள்ள கடந்த அரசாங்கத்தின் காலத்தில் வெளிநாடுகளில் இருந்து சுமார் 600 பேர் இலங்கைக்கு வந்தனர் எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

அத்தோடு மேற்படி பாடசாலைகளை ஒழுங்குபடுத்துவதற்கு கடந்த அரசாங்கம் எந்தவித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என்றும் கல்வி அமைச்சர் ஜி.எல். பீரிஸ் குற்றம் சாட்டினார்.

# பிரித்தானியாவில் அம்பிகைக்கு பெருவாரியான ஆதரவு: புலம்பெயர் தமிழர்கள் பொலிஸார் இடையில் முறுகல்







பிரித்தானியா - கெண்டனில் உணவு ஒறுத்தல் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் அம்பிகை செல்வகுமாருக்கு ஆதரவளித்த புலம்பெயர் தமிழர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது. இலங்கையை சர்வதேச நீதிமன்றில் நிறுத்துமாறு வலியுறுத்தி அம்பிகை செல்வகுமார் என்பவர் 17 ஆவது நாளாக உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்.

அவருக்கு ஆதரவு அளிக்கும் வகையில் 100 இற்கும் மேற்பட்ட புலம்பெயர் தமிழர்கள் அவரது இல்லத்துக்கு வெளியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஒன்று கூடி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது போராட்டக்களத்திற்குச் சென்ற பொலிஸார் அவர்களை அங்கிருந்து கலைந்து செல்லுமாறு கூறியமையுடன், தடியடியும் நடத்தினர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தநிலையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டதாகவும் இதன்போது ஒருவர் கைது செய்யப்பட்டு பின்னர் அவர் விடுவிக்கப்பட்டார் எனவும் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதேநேரத்தில் இதன்போது ஒருவர் தாக்கப்பட்டார் எனவும் பிரித்தானிய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின்கொடியைஏந்திஇருந்தமைகுறிப்பிடத்தக்கது.

ஒவ்வொரு நாளும் உடல்நலம் மோசமடைந்து வரும் அம்பிகை செல்வகுமார், உலகெங்கிலும் உள்ள அரசியல்வாதிகள் மற்றும் ஆதரவாளர்களிடமிருந்து தொடர்ந்து ஆதரவைப் பெற்று வருகிறார்.

இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலைக்கு நீதி கோரி, இலங்கையை குற்றவியல் நீதிமன்றில் நிறுத்தவேண்டும் உட்பட 4 கோரிக்கைகளை முன்வைத்து பிரித்தானியாவில் வசிக்கும் அம்பிகை செல்வகுமார், சாகும் வரையிலான உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தை லண்டனில் கடந்த 27 ஆம் திகதி ஆரம்பித்தார்.

அவருக்கு ஆதரவாக இலங்கையின் மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் யாழ்ப்பாணம் உட்பட பல பகுதிகளிலும் உண்ணாவிரதப் போராட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மேலும் இலங்கை அரசாங்கத்தால் தமிழர்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்களுக்கு சர்வதேச நீதி கோரி போராட்டங்கள் மற்றும் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு பரிந்துரைக்குமாறு சர்வதேச சமூகத்துக்கு அழைப்பு விடுத்தது சுவிட்ஸர்லாந்து மற்றும் பிரான்ஸிலும் போராட்டங்கள் நடைபெற்றன.

இதேநேரம், ஆஸ்திரேலிய நாடாளுமன்ற உறுப்பினர்களும் அம்பிகை செல்வகுமாரின் உண்ணாவிரதத்துக்கு ஆதரவு அறிக்கைகளை வெளியிட்டனர்.

அதன்படி, 'எந்தவோர் அரசாங்கமும் தங்கள் மனித உரிமைப் பதிவின் சுயாதீனமான சர்வதேச மதிப்பாய்வுக்கு பயப்படக்கூடாது. அம்பிகையின் கோரிக்கைகளுக்கு சாதகமாக பதிலளிக்குமாறு பிரித்தானிய அரசாங்கத்தை நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். இப்போது அவரது நலன் குறித்து நாங்கள் மிகவும் அக்கறை கொண்டுள்ளோம்' என்று நாடாளுமன்ற உறுப்பினர் டேவிட் ஷூப்ரிட்ஜ் கூறியுள்ளார்.

# ஆயிரம் ரூபா உறுதிமொழி தற்போது நிறைவேறிவிட்டது!

## ஜீவன் தொண்டமான் பெருமிதம்

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கிய ஆயிரம் ரூபா உறுதிமொழி இன்று நிறைவேற்றப்பட்டுள்ளது என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில், சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தின் கீழ் இயங்கும் தொண்டமான் தொழில் பயிற்சி நிலையத்தினுடைய எதிர்காலச் செயற்பாடுகள் தொடர்பான சந்திப்பொன்று, ஹற்றன் தொண்டமான் தொழில் பயிற்சி நிலையத்தில், கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் திறன்கள் அபிவிருத்தி, தொழில் கல்வி ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சர் சீதா அறம்பேபொல கலந்துகொண்டார்.

இதன்போது தொண்டமான், தொழில் பயிற்சி நிலையத்தின் தற்போதைய மற்றும் கடந்த காலங்களில் இடம்பெற்ற செயற்பாடுகள் பற்றியும் மற்றும் மாணவர்களின் கற்கை நெறிகள் தொடர்பாகவும் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

அத்தோடு, சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தின் கீழ் இயங்கும் நோர்வூட் தொண்டமான் விளையாட்டரங்கு, இரம்போடை தொண்டமான் கலாசார நிலையம் அதேபோல் பிரஜாசக்தி நிலையங்களுடைய செயற்பாடுகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இதேவேளை, தொண்டமான் தொழில் பயிற்சி நிலையத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட கற்கை நெறிகளை அமைச்சர்கள் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்ததோடு, அங்கு இடம்பெறும் மாணவர்கள் பயிசிகளில் ஈடுபடுவதையும் பார்வையிட்டனர்.

இந்த நிகழ்வில் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஸ்வரன், இலங்கைக்கான இந்திய கண்டி பிராந்திய பதில் உயர்ஸ்தானிகர் ராகேஷ் நடராஜ், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், அமைச்சின் செயலாளர் குமாராசிரி, சௌமியமூர்த்தி தொண்டமான் ஞபகார்த்த மன்றத்தின் பணிப்பாளர் கணேஷ் ஈஸ்வரன், அதிகாரசபையின் தலைவர் காந்தி சௌந்தராஜன் அத்தோடு தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தின் பணிப்பாளர்கள், உத்தியோகத்தர்கள், ஹற்றன் தொண்டமான் தொழில் பயிற்சி நிலையத்தின் மாணவர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

மேற்படி நிகழ்வில் கலந்துகொண்ட ஜீவன் தொண்டமான், 'தேர்தல் விஞ்ஞாபனம் ஊடாக எமது மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நாம் நிறைவேற்றி வருகின்றோம்.

அடிப்படை நாள் சம்பளமாக ஆயிரம் ரூபா பெற்றுக் கொடுக்கப்படும் என உறுதியளித்தோம். அந்த உறுதிமொழி இன்று நிறைவேற்றப்பட்டுள்ளது. ஆனால் அதிலும் சிலர் குறை காண்கின்றனர்.

தொழிலாளர்களுக்கான நலன்கள் இல்லாதுபோய் விடும் எனவும் விமர்சிக்கின்றனர். நாம் தொழிலாளர்களை பாதுகாப்போம். எனினும், சந்தா வாங்கும் சிலர் தொழிலாளர்கள் நலன் பற்றி சிந்திப்பதில்லை.

நுவரெலியா மாவட்டத்தில் மலையகத்துக்கான பல்கலைக்கழகம் அமையவுள்ளது. ஒரு வருட காலப் பகுதியில் எம்மால் முக்கியமான சில விடயங்களை நிறைவேற்ற முடிந்தமை மகிழ்ச்சியளிக்கின்றது.

மலையகத்தை மாற்ற முடியும் என்ற நம்பிக்கை எனக்குள்ளது. எமது இளைஞர்களும் நம்புகின்றனர். நாம் மக்களுக்குதான் பதிலளிக்க வேண்டாம். வீண் விமர்சனங்களை முன்வைப்பவர்களுக்கு பதிலளிக்க வேண்டிய தேவை இல்லை.' - என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மீண்டும் மட்டக்களப்பில் கல்வி நடவடிக்கைகள்!

நாட்டிலுள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் திங்கட்கிழமை மீண்டும் கல்வி நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன.

க.பொ.த.சாதாரண தரப் பரீட்சை மற்றும் கொவிட் 19 ஆகியவற்றால் மூடப்பட்டிருந்த பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஐந்து கல்வி வலயங்களிலுள்ள பாடசாலைகள், மீண்டும் கல்வி நடவடிக்கைகளுக்காகத் திறக்கப்பட்டன.

கொவிட் அச்சுறுத்தல்கள் தொடர்கின்றபோதிலும் சுகாதார நடைமுறைகளைப் பேணியவாறு மாணவர்கள் பாடசாலைகளுக்கு சமுகமளித்தமையைக் காணமுடிந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் மாணவர்களின் வரவு திங்கட்கிழமை அதிகளவில் இருந்ததாக வலய கல்விப் பணிப்பாளர்கள் தெரிவித்தனர்.

பாடசாலைகளின் முதலாம் தவணையின் இரண்டாம் கட்டம் ஆரம்பமாகியுள்ள நிலையில், எதிர்வரும் ஏப்ரல் 9 ஆம் திகதி, இரண்டாம் தவனை விடுமுறை கல்வி அமைச்சின் செயலாளரால் அறிவிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



# கூட்டு ஒப்பந்தம் இனிமேல் முத்தரப்பு ஆக வேண்டும்!

## இராதாகிருஷ்ணன் வலியுறுத்து

கூட்டு ஒப்பந்தம் இனிமேல் முத்தரப்பு ஒப்பந்தமாக இருக்க வேண்டும் என மலையக மக்கள் முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது.

அத்துடன், காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களைப் பெரும்பான்மையினர் தம்வசம் வைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே, தற்போது வட மாகாணக் காணி ஆவணங்கள் அநுராதபுரத்துக்கு மாற்றப்பட்டன என மலையக மக்கள் முன்னணியின் தலைவர் வே.இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

மலையக மக்கள் முன்னணியின் மகளிர் தின விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை ஹற்றனில் முன்னணியின் தலைமைக் காரியாலய மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் -

கூட்டு ஒப்பந்தம் இனிமேல் முத்தரப்பு ஒப்பந்தமாக இருக்க வேண்டும். ஏனெனில், மலையக மக்களின் பிரச்சினை இதன்போது அரசாங்கத்துக்கு தெளிவுபடுத்தப்படும். தற்போது கூட்டு ஒப்பந்தத்தில் தொழிற்சங்கங்களும், கம்பனிகளுமே கைச்சாத்திடுகின்றன. எனவே, மூன்றாவது தரப்பாக அரசாங்கத்தையும் இணைத்துக் கொள்ள வேண்டும்.

நாட்டில் புரையோடிப்போயுள்ள இனப் பிரச்சினையைத் தீர்க்க சிங்களவர்களின் ஒத்துழைப்பும் அவசியம். அதேபோல், பெண்கள் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமாயின் ஆண்களின் அனுசரணை அவசியம்.

தற்போதைய நிலையில் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களைப் பெரும்பான்மையினர் தம்வசம் வைத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காகவே தற்போது வட மாகாண காணி ஆவணங்கள் அநுராதபுரத்துக்கு மாற்றப்படுகின்றன. மக்களின் உரிமைகளைப் பறிக்கும் செயற்பாடுகளையே அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது. - என்று குறிப்பிட்டுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

# 15 ஆவது நாளாகவும் தொடரும் உணவு ஒறுப்புப்போர்: மோட்டார் சைக்கிளில் வந்த பொலிஸார் அச்சுறுத்தல்!




மட்டக்களப்புமாமாங்கப்பிள்ளையார் ஆலயத்துக்குமுன்னால்பலஅச்சுறுத்தல் களுக்கு மத்தியில் நடைபெறும் உண்ணாவிரதப் போராட்டத்தை முடக்கும் நோக்கில்நேற்றும்மோட்டார்சைக்கிளில் வந்த பொலிஸார் போராட்டகாரர்களின் பெயர்களை கேட்டு அச்சுறுத்தும் வகையில் செயற்பட்டனர்.

நேற்று (திங்கட்கிழமை) காலை மட்டக்களப்பு மாமாங்க ஈஸ்வரர் ஆலயத்திற்கு முன்பாக சுழற்சி முறையிலான உணவுதவிர்ப்புப் போராட்டம் நடைபெறும் இடத்திற்கு மோட்டார் சைக்கிளில் வந்த பொலிஸார் போராட்டக்காரர்களை அச்சுறுத்தும் வகையில் போராட்டத்தில் அமர்ந்திருந்த காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் பெயர்களைக் கேட்டு அச்சுறுத்தும் வகையில் செயற்பட்டுள்ளனர். இவ்வாறு போராட் டத்தில் ஈடுபட்டு வரும் பாதிக்கப்பட்ட மக்களின் போராட்டத்தை எப்படியாவது தடுத்து நிறுத்தவேண்டும்என்றநோக்கில்தொடர்ச்சியாக மட்டக்களப்பு பொலிஸார் பல்வேறு அச்சுறுத்தல்களை திட்டமிட்டு ஏற்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஏற்கனவே உண்ணாவிரதப் பந்தலை இரவோடு இரவாக அகற்றிய பொலிஸார், தற்போது நடு வெயிலில் அமர்ந்து போராடிவரும் தங்களை அச்சுறுத்தும் வகையில் செயற்பட்டு வருகின்றனர் எனவும் போராட்டக்காரர்கள் தெரிவித்துள்ளனர்.

# வீட்டு தனிமைப்படுத்தலை நிராகரித்துள்ளார் நாமல்!



டுபாயில் இருந்து நாடு திரும்பியவுடன் வீட்டிலேயே தனிமைப்படுத்திக் கொள்ளக்கூடிய சந்தர்ப்பம் காணப்பட்ட போதிலும், அதனை தான் பயன்படுத்திக் கொள்ளவில்லைஎனவிளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, தான் தனிமைப்படுத்தப்பட்ட நிலையில் இருப்பதாக டுவிட் செய்துள்ளார். ஆனால் அவர், வீட்டு தனிமைப்படுத்தலின் கீழ் இருப்பதாக வந்த செய்திகளை நிராகரித்துள்ளார்.

டுபாயில் இருந்து நாடு திரும்பியவுடன் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, தனிமைப்படுத்தி கொள்வாரென தாங்கள் நம்புவதாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், கடந்த வாரம் தெரிவித்திருந்தனர்.

இவ்வாறு நாமல் ராஜபக்ஷ, தன்னை 14 நாள்களுக்கு தனிமைப்படுத்திக்கொள்வதன் ஊடாக ஏனையோருக்கு முன்மாதிரியாக இருப்பாரென எதிர்ப்பார்ப்பதாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கத் தலைவர் உபுல் ரோஹண அண்மையில் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் நாடு திரும்பியுள்ள நாமல் ராஜபக்ஷ, வீட்டிலேயே தனிமைப்படுத்திக் கொள்ளக்கூடிய சந்தர்ப்பம் காணப்பட்ட போதிலும் தனது மனைவி மற்றும் குழந்தையின் நலனுக்காக நிராகரித்துள்ளார் எனக் குறிப்பிட்டுள்ளார்.

ஆகவே, அரசாங்கத்தால் பரிந்துரை செய்யப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் நிலையமொன்றில் தனிமைப்படுத்தலுக்கு உட்பட்டுள்ளார் என அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இதேவேளை தான் தனிமைப்படுத்தல் விதிகளை மீறி, வெளிநாட்டிலிருந்து திரும்பியதும், வீடு சென்று விட்டார் எனசில சமூக ஊடகங்களில் செய்திகள் வெளியிடப்பட்டு வருகின்ற போதிலும், அவற்றில் எவ்வித உண்மையும் கிடையாது எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

# கிராண்ட்பாஸ் தீ விபத்தில் 50 வீடுகள் முற்றாக நாசம்!





கொழும்பு, கிராண்ட்பாஸ் – கஜிமாவத்தைப் பகுதியில் இடம்பெற்ற தீ விபத்தில் 50 வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளன.

இன்று அதிகாலை 3 மணியளவில் திடீரென அங்குள்ள குடியிருப்புப் பகுதியில் தீ பரவியது என்று பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

கொழும்பு மாநகர சபையின் 8 தீயணைப்பு வாகனங்களின் உதவியுடன் பிரதேச மக்களும், பொலிஸாரும் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

கஜிமாவத்தைப் பகுதியில் நெருக்கமாக 250 வீடுகள் அமைந்துள்ள நிலையில் அவற்றில் 50 வீடுகளுக்குத் தீ பரவியது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் உயிர் சேதங்கள் எதுவும் ஏற்படாத போதும், பெருமளவான பொருள்கள் தீயில் எரிந்து கருகியுள்ளன என்றும் பிரதேச மக்கள் குறிப்பிட்டனர்.

தீ ஏற்பட்டமைக்கான காரணம் இது வரை கண்டறியப்படவில்லை. சம்பவம் தொடர்பாக கிராண்ட்பாஸ் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

# கிழக்கு மாகாண நீர் அபிவிருத்தித் திட்டம்: மோசடி காரணமாக ஆறு கோடி ரூபா நஷ்டம்!

கொழும்பு, மார்ச் 16

ஜெய்கா நிறுவனத்தின் நிதியுதவியுடன் 2013 ஆம் ஆண்டு முன்னெடுக்கப்பட்ட கிழக்கு மாகாண நீர் அபிவிருத்தித் திட்டத்துக்காக டி.ஐ குழாய்கள் மற்றும் துணைக் கருவிகளை இறக்குமதி செய்யும்போது இடம் பெற்ற மோசடி காரணமாக 62,499,656 ரூபாவை அரசாங்கம் மேலதிகமாகச் செலுத்தவேண்டி ஏற்பட்டதாக அண்மையில் நடைபெற்ற அரசாங்க கணக்குகள் குழுவில் புலப்பட்டது.

இந்தத் திட்டத்துக்குத் தேவையான டி.ஐ குழாய்கள் மற்றும் துணைக் கருவிகளை இறக்குமதி செய்யும் பொறுப்பு திறைசேரியால் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு வழங்கப்பட்டதுடன், இதற்கான ஒப்பந்தத்தை அக்சஸ் இன்டர்நஷனல் தனியார் நிறுவனத்துக்கு சபை வழங்கியிருந்தது.

இந்தப் பொருள்களுக்கு வரியைச் செலுத்தாது களஞ்சியக் கிடங்கில் வைப்பதற்கு சுங்கத் திணைக்களம் அனுமதி வழங்கியிருந்ததுடன், இதற்காக 08 சுங்கப் பிரகடனங்களும் வழங்கப்பட்டுள்ளன. இவற்றின் பெறுமதி 51 லட்சத்து 39 ஆயிரத்து 621 அமெரிக்க டொலராக இருந்தபோதும், அவற்றை களஞ்சியத்திலிருந்து விடுவிக்கும்போது தேசிய ரீதியில் தயாரிக்கப்பட்ட பற்றுச்சீட்டில் மொத்தப் பெறுமதி 63 லட்சத்து 50 ஆயிரத்து 364 அமெரிக்க டொலர்கள் எனப் போலியான தகவல்கள் குறிப்பிடப்பட்டு விடுவிக்கப்பட்டமையால் குறிப்பிட்ட தனியார் நிறுவனம் ஒரு கோடியே 20 லட்சத்து 7ஆயிரத்து 98 டொலர் இலாபத்தைப் பெறுவதற்கு வாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுத்தமை தொடர்பிலும் குழு கவனம் செலுத்தியது.

இதற்கும் அப்பால், போலியான பற்றுச்சீட்டு தயாரித்தமை, போலியான தகவல்களை வழங்கி உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதி மோசடியாகப் பெறப்பட்டுள்ள நிலையில், இதனை விசாரணை செய்த சுங்கத் திணைக்களம் இது அக்சஸ் நிறுவனத்தின் தவறு இல்லையென விசாரணையை முடிவுக்குக் கொண்டு வந்தமை குறித்தும் அரசாங்க கணக்குகள் பற்றிய குழு கவனம் செலுத்தியது.

இவ்விவகாரம் குறித்து விசாரணை நடத்துவதற்குப் புதிய குழுவொன்றை நியமித்திருப்பதாகவும், இந்த விசாரணை அறிக்கையை ஏப்ரல் 01ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க முடியும் என்றும் சுங்கத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

அத்துடன், நுரைச்சோலையில் உள்ள அனல்மின் நிலையத்துக்குத் தேவையான நிலக்கரியை வழங்குவதற்கு நான்கு அரசாங்க நிறுவனங்களின் (வரையறுக்கப்பட்ட கப்பல் கூட்டுத்தாபனம் 10 வீதம், இலங்கை மின்சாரசபை 60 வீதம், இலங்கை துறைமுக அதிகாரசபை 10 வீதம், திறைசேரி 20 வீதம்) உரிமையைக் கொண்டுள்ள லங்கா கோல் கம்பனி பிறைவெட் லிமிட்டட் நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த நிறுவனத்தினால் 2016ஆம் ஆண்டில் நிலக்கரியை இறக்குமதி செய்த 66 சந்தர்ப்பங்களில் நிலக்கரிகளின் CIF பெறுமதி தொடர்பில் சரியான தகவல்களை வெளிப்படுத்தாமையால் அரசாங்கம் வசூலிக்க வேண்டிய 1.87 கோடி ரூபா வற் வரி தொடர்பிலும் கோபா குழுவில் கலந்துரையாடப்பட்டது.

இதில் வற் வரி சரியான முறையில் கணிப்பிடப்பட்டு சுங்கப் பதிவுகளில் குறிப்பிடப்படாமையால் அரசாங்கத்தினால் வற் வரி செலுத்துவது தொடர்பில் நடத்தப்பட்ட சுங்க விசாரணைகளுக்கு அமைய குறைவாகக் கணிப் பிடப்பட்ட வற் வரிப் பெறுமதியான 20.5 கோடி ரூபா, மேலதிக வரியாக அறவிடப்படாமல் தண்டப் பணமாக அறிவிட்டமையால் குறித்த தண்டப் பணத்தில் 50 வீதம் அல்லது 10.25 கோடி ரூபா அதிகாரிகளுக்கான பரிசாக வழங்கப்பட்டமை, மேலும் 20 வீதம் அதாவது 4.1 கோடி ரூபா அதிகாரிகளின் நலன்புரிக்கான நிதியத்துக்கு வழங்கப்பட்டமை, அரசாங்கத்தின் வருமானத்தில் 6.15 கோடி சேர்க்கப்பட வேண் டியுள்ளமை குறித்தும் குழு கவனம் செலுத்தியது.

இது தொடர்பில் மீண்டும் விசாரணை நடத்தி அறிக்கையொன்றை தம்மிடம் சமர்ப்பிக்குமாறு கோபா குழு, திறைசேரியின் பணிப்பாளருக்கு உத்தரவிட்டது. இவ்வாறான மோசடிகள் எதிர்காலத்தில் இடம்பெறாதிருக்கும் வகையில் சுங்க கட்டளைச் சட்டத்தில் திருத்தங்களைக் கொண்டுவருவது குறித்தும் குழு சுட்டிக் காட்டியது.

இக்கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர்களான தயாசிறி ஜயசேகர, துமிந்த திஸாநாயக்க, லசந்த அழகிவண்ண, வைத்தியகலாநிதி சுதர்ஷினி பெர்னாண்டேபுள்ளே, நாடாளுமன்ற உறுப்பினர்களான திஸ்ஸ அத்தநாயக்க, பேராசிரியர் ரஞ்சித் பண்டார, வைத்தியகலாநிதி உபுல் கலப்பதி, வீரசுமன வீரசிங்ஹ, கலாநிதி ஹரினி அமரசூரிய, நிரோன் பெரேரா, கணக்காய்வாளர் நாயகம் உள்ளிட்ட அரசாங்க அதிகாரிகள், திறைசேரியின் செயலாளர் எஸ்.ஆர்.ஆர்ட்டிகல உள்ளிட்ட அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

# காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் அதிகாரம், பணி, செயல்பாடு யாது?




## ஒரு மேலோட்டப் பார்வை

> உச்சவரம்பு எல்லையை அறியாத பல சட்டத் தரணிகள் 60 ஏக்கர், 70 ஏக்கர் உறுதி தற்போதும் எழுதப்படுவதோடு சில சட்டத்தரணிகள் விவசாய நிலத்தில் 30 அல்லது 40 ஏக்கரிற்கும் உறுதி எழுது கின்றனர். இதை அவதானித்ததும் ஆணைக்குழு தனது அதிகாரத்தின் கீழ் தலையிட்டு மேலதிக நிலத்தை கையகப்படுத்துகின்றது.

● ந.லோகதயாளன்

காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் வடக்கு மாகாண அலுவலகம் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் இயங்கிய நிலையில் அதன் ஆவணங்கள் அநுராதபுரத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டமை முதல் இதன் பெயர் அதிகம் உச்சரிக்கப்படுகின்றது. இந்த காணிச் சீர்திருத்த ஆணைக்குழு என்றால் என்ன, அதன் செயல்பாடுகள் எத்தகையது என்பது தொடர்பில் பலர் தற்போதுதான் தேடுகின்றனர்.

காணிச் சீர்திருத்த ஆணைக்குழு என்பது 1971ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டது. அச்சமயம் காணிச் சீர்திருத்த உச்ச வரம்புச் சட்டம் கொண்டு வரப்பட்டது. அந்தச் சட்டத்தின் கீழ் ஒருவர் 50 ஏக்கர் நிலத்தை மட்டுமே உச்சபட்சமாக வைத்திருக்க முடியும். அதற்கு மேல் வைத்திருந்த நிலங்கள் அர சிற்கு உடமையாக்கப்பட்டது. இவ்வாறு 50 ஏக்கர் மட்டுமே வைத்திருக்க முடியும் என்ற வரையறையில் 50 ஏக்கரும் மேட்டு நிலமாகவும் இருக்க முடியும். ஆனால் வயல் நிலமாயின் 25 ஏக்கர் மட்டுமே உச்சபட்சமானது. அதற்கு எஞ்சிய அளவு மேட்டு நிலம் வைத்திருக்க முடியும்.

இச் சட்டத்தின் கீழ் யாழ்ப்பாணத்தில் அக் காலத்தில் இருந்த தனவந்தர்களிடம் காணப்பட்ட 50 ஏக்கரிற்கும் அதிகமான நிலம் அரசின் இந்த ஆணைக் குழுவின் கீழ் சென்றது. இதில் அதிகமாக கிளிநொச்சி பளையில் நிலம் காணப்படுகின்றது. (1971ஆம் ஆண்டு கிளிநொச்சி தனி மாவட்டமாக பிரிக்கப்படவில்லை)

இதே போன்று முல்லைத்தீவு மாவட்டத்தின் தற்போதைய துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவும் அப்போது யாழ்ப்பாணம் மாவட்டத்தின் நிர்வாக எல்லைப் பரப்பிலேயே இருந்து 1978 ஆம் ஆண்டே பிரிக்கப்பட்டது. தற்போதைய கிளிநொச்சி மாவட்டத்தின் வன்னேரிப்பகுதியும் அக்காலத்தில் துணுக்காய் பிரதேச செயலகத்தின் கீழான நிர்வாகத்திலேயே இருந்த பகுதியாகும். வவுனியா மற்றும் மன்னாரில் தனவந்தர்களிடம் இருந்த நிலத்தில் இருந்தும் அவர்கள் மேலதிகமானவற்றை அரசிடம் கையளித்தனர் அல்லது அரசு பிடுங்கிக் கொண்டது. இக்காலப்பகுதியிலேயே இதில் யாழ்ப்பாணத்தில் அதிக நிலங்கள் இந்தியாவின் சிதம்பரம், வண்ணார்பண்ணை சிவன் கோவில்களின் பெயரில் அதிக உறுதிகள் எழுதப்பட்டுள்ளமையால் அதிகமான நிலச் சொந்தக்காரர்கள் மேலதிக நிலத்தை அரசிடம் வழங்காது ஆலயங்களிற்காக எழுதியிருக்கலாம் என்ற ஒரு கருத்தும் உள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நகரின் மத்தியில் மட்டுமன்றி சண்டிலிப்பாய், சங்கானை, வேலணை, காரைநகரிலும் இவ்வாறு அதிக நிலம் இன்றும் பல ஆலயங்களின் பெயரில் உண்டு. இவ்வாறு வரையறைக்கு மேலதிக நிலத்தை அரசிற்கு வழங்கும் போது தனியாரின் பெயரில் இருந்த உறுதி இரத்து செய்யப்பட்டு அரசினால் சுவீகரீக்கப்பட்டது. இவ்வாறு சுவீகரிக்கப்பட்ட நிலங்கள் யாவும் இந்த காணிச் சீர்திருத்த ஆணைக் குழுவின் ஆளுகைக்கு அல்லது அதிகாரத்திற்கு உட்பட்டது.

இந்த நிலத்தின் மீது பிரதேச செயலாளருக்கு கூட அரச நிலத்திற்கு இருப்பது போன்ற போதிய அதிகாரம் இல்லை. ஆணைக்குழுவே அதிகமான அதிகாரம் கொண்டுள்ளது.

காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் நிலம் தொடர்பில் வடக்கு மாகாணத்தில் காணப்படும் பிரதேச செயலகங்களினால் எந்த தகவல்களும் சேகரித்து ஆவணப்படுத்தப்பட இல்லை. அதனால் பிரதேச செயலகங்களில் அண்ணளவான தரவுகளே உள்ளது.

காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவானது தனது ஆளுகையில் உள்ள நிலங்களில் இரு தேவைகளிற்காக நிலங்களை வழங்கும். அதிலே குடியிருப்பிற்காக மிகவும் வறுமையானவர்கள் என இனம் கண்டுகொண்டால் 2 பரப்பு மட்டும் வழங்கப்படும். இரண்டாவது வகை தொழில் முயற்சியின் பால் குத்தகையின் அடிப்படையில் வழங்கப்படுவது. 5 ஏக்கர் வழங்க முடியும். அதேநேரம் பதிவு கொண்ட நிறுவனமாயின் 50 ஏக்கர் வரை பெற்றுக்கொள்ளலாம். இந்த தொழில் முயற்சிக்காக வழங்கப்படும் நிலத்திற்கு அரசிற்கு குத்தகை செலுத்த வேண்டும்.

இந்த நிலத்திற்கு பெறுமதி கணிப்பீட்டுத் திணைக்களம் கணிக்கும் பெறுமதியின் 4 வீதமே குத்தகையாக செலுத்த வேண்டும். இதனால் பளையில் உள்ள நிலத்திற்கு ஏக்கருக்கு 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா தற்போது பெறுமதி கணிப்பிடப்படுவதனால் ஆண்டிற்கு 10 ஆயிரம் ரூபா செலுத்த வேண்டும். இந்த வகையான நிலம் தற்போது கிளிநொச்சி மாவட்டத்தில் மூவாயிரம் ஏக்கரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆயிரத்து 500 ஏக்கரும் உள்ளன. இதில் அதிகமானவை துணுக்காய், ஒட்டுசுட்டான் பிரதேசங்களிலேயே உள்ளன.

வவுனியா மாவட்டத்திலும் ஆயிரத்து 500 ஏக்கரும், மன்னார் மாவட்டத்திலும் மூவாயிரம் ஏக்கருமாக வடக்கில் மட்டும் 10 ஆயிரம் ஏக்கருக்கும் அதிகமான நிலம் உள்ளது.

இதே நேரம் வடக்கின் 5 மாவட்டத்திலும் இது வரை சுமார் ஆயிரம் ஏக்கர் மட்டும் பலருக்கும் பிரித்து வழங்கப்பட்ட நிலையில் எஞ்சிய நிலம் ஆணைக்குழுவின் வசம் உள்ளது. கிளிநொச்சி, மன்னார் மாவட்டங்களில் இருப்பிடத்திற்கு நிலம் இன்மையால் அந்த 2 பரப்பையேனும் வழங்குமாறு 650 பேர் விண்ணப்பித்துள்ளனர். இந்த ஆணைக்குழுவால் 2018ஆம் ஆண்டு கோரிய விண்ணப்பத்திற்கு 300 வரையானோர் விண்ணப்பித்தனர். இருந்தும் பதிலேதும் இல்லாதபோதும் தெற்கைச் சேர்ந்த 30 பேருக்கு பளையில் கடந்த ஆண்டு ஆரம்பத்தில் அனுமதி வழங்கியதான சர்ச்சை எழுந்திருந்த பின்பே இந்த ஆணைக்குழு தொடர்பில் அதிகம் உச்சரிக்கப்பட்டது.

இதேநேரம் மிக துயரமானதும் பகிரங்கப்படுத்த வேண்டியதுமான ஓர் முக்கிய விடயமும் உண்டு . இதற்காக சில சட்டத்தரணிகள் கோபமடைய அல்லது சட்ட வியாக்கியானம் கூற முற்படலாம் அதாவது உச்சவரம்பு எல்லையை அறியாத பல சட்டத் தரணிகள் 60 ஏக்கர், 70 ஏக்கர் உறுதி தற்போதும் எழுதப்படுவதோடு சில சட்டத்தரணிகள் விவசாய நிலத்தில் 30 அல்லது 40 ஏக்கரிற்கும் உறுதி எழுது கின்றனர். இதை அவதானித்ததும் ஆணைக்குழு தனது அதிகாரத்தின் கீழ் தலையிட்டு மேலதிக நிலத்தை கையகப்படுத்துகின்றது. இதிலே துரதிர்ஷ்டம் என்னவென்றால் இந்த வகையில் போரிற்கு பின்பு - 2010ஆம் ஆண்டிற்கு பின்பு இந்த ஆணைக் குழுவிற்கு 203 ஏக்கர் நிலம் வடக்கு மாகாணத்தில் இப்படிச் சென்றுள்ளது என்ற மிகப் பெரும் உண்மையும் உள்ளது.

இதேநேரம் தெற்கிலே ஏக்கருக்கு 5லட்சம் ரூபா வாங்கிக்கொண்டு அறிந்தவர்கள், தெரிந்தவர்களிற்கு 5 ஏக்கர் வரையில் - அதாவது ஒருவரிடம் 25 லட்சம் ரூபாவரையில் தரகுப் பணம் பெற்று - இவ்வாறு நிலம் வழங்கப்படுவதாக நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் அண்மையில் பகிரங்கமாகவே குற்றம் சாட்டியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# காணி ஆவணங்கள் அ'புர அனுப்பட்டமைக்கும் தனக்கும் தொடர்பில்லை என்கிறார் அரச அதிபர்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மார்.16

யாழ்.மாவட்டத்திலிருந்து அரச காணி ஆவணங்களை அநுராதபுரத்திற்கு கொண்டு சென்றமைக்கும் எனக்கும் எந்த தொடர்புமில்லை, அது என்னுடைய முடிவும் அல்ல - என யாழ். மாவட்ட செயலர் க.மகேசன் கூறியிருக்கின்றார்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் உள்ள காணிச்சீர்திருத்த ஆணைக்குழு அலுவலகத்திலிருந்து காணி ஆவணங்கள் அநுராதபுரத்திற்கு சத்தம் சந்தடியின்றிக் கொண்டு செல்லப்பட்டுள்ளமை தொடர்பாக ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பாக மேலும் அவர் கூறுகையில் -

2008 ஆம் ஆண்டுக்கு முன்னர் வடமாகணத்தின் காணிச்சீர்திருத்த ஆணைக்குழுவின் காணிகள் தொடர்பான கோப்புகள் அனைத்தும் அநுராதபுரத்தில் இருந்தே கையாளப்பட்டன.

பின்னர் யாழ்.மாவட்ட செயலகத்தில் அதற்கான ஒரு தனி இடம் ஒதுக்கப்பட்டு அதன் நிர்வாக நடவடிக்கைகள் அனைத்தும் ஆணைக்குழுவின் உதவிப் பணிப்பாளர் தலைமையில் இங்கு நிர்வகிக்கப்பட்டு வந்தன.

குறித்த காணி சீர்திருத்த அலுவலகம் யாழ்.மாவட்ட செயலகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள அலுவலகம் அல்ல. அதன் நிர்வாக நடவடிக்கைகள் அனைத்தும் அதற்கான பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் மேற்பார்வையில் இடம்பெற்று வந்தன.

ஆகவே ஆவணங்களை அனுராத



புரத்துக்கு கொண்டு செல்வதா? இல்லையா? என்ற முடிவைக் கூட அவர்களேதான் எடுத்திருந்தார்கள். அது எனது முடிவு சம்பந்தப்பட்டதல்ல.- என அவர் மேலும் தெரிவித்தார்.

காலைக்கதிர்
Kalaikkathir



- முருகபூபதி -

எழுத்தாளர் முருகபூபதி வரையும் **'எழுத்தும் வாழ்க்கையும்!'** தொடரின் அங்கம் 32 இன்று இங்கு பிரசுரமாகின்றது.

ஊருக்கு நல்லது சொல்வேன் எழுதியவரின் பின்னணியில் சொல்லவேண்டிய செய்திகள் என்ற மகுடத்தில் ஊடகவியலாளர் தனபாலசிங்கம் குறித்து அவர் வரைந்த கட்டுரையின் நேற்றைய மிகுதி இது.

# ஊடகவியலாளர் தனபாலசிங்கமும் தமிழ்ப் பத்திரிகை உலகமும்



1985 ஆம் ஆண்டு எதிர்பாராதவிதமாக சோவியத்துக்குச்செல்லும் அழைப்பு எனக்கு கிடைத்தது. அவ்வேளையில் மாஸ்கோவில் சர்வதேச மாணவர் இளைஞர் விழாவும் மாநாடும் சோவியத் அதிபர் கொர்பச்சேவ் தலைமையில் நடந்தது. ஆனால், வீரகேசரியில் அன்று இருந்த நிருவாக இயக்குநர் எனக்கு மாஸ்கோ சென்று திரும்பி வருவதற்கு லீவு அனுமதிக்க மறுத்ததுடன் - வழக்கமாக அவ்வாறு வெளியே பிரதிநிதிகளாக தெரிவாகி செல்பவர்களுக்குத் தரப்படும் சன்மானம் ஐம்பது டொலர்கள் தருவதற்கும் மறுத்துவிட்டார். நான் எனது சொந்த லீவில் செல்வதற்கு மாத்திரம் அனுமதி தரப்பட்டது.

அம்மகாநாட்டிற்கு செல்லும் வெளிநாட்டுப்பிரதிநிதிகள் அங்கத்துவப்பணமாக 100 ரூபிள்கள் செலுத்தவேண்டும். அப்பொழுது ஒரு அமெரிக்க டொலர் ஏழு ரூபிள்கள் பெறுமதியானது.

வீட்டில் எனது குழந்தைகளுக்கு பால் மாவு வாங்கிக்கொடுப்பதற்காகவே வாரம் ஒரு தடவை 15 ரூபாவுக்கு வீரகேசரியில் கட்டுரைகளும் மித்திரனில் புனைப்பெயரில் தொடர்கதையும் எழுதிக்கொண்டிருந்த நான், அவ்வளவு பணத்திற்கு எங்கே செல்வேன். அந்த எதிர்பாராத பயணத்தை தவிர்க்கவே விரும்பினேன். எனது நிலையறிந்த நண்பர் தனபாலசிங்கம் தனது வீட்டுக்கு அனுப்புவதற்காக சேமித்துவைத்திருந்த பணத்தைத்தந்து என்னை மாஸ்கோவுக்கு விமானம் ஏற்றிவிட்டார்.

ஆயினும் அந்தப்பணத்தை காலம் கடந்துதான் 1987 இல் அவுஸ்திரேலியா வந்த ஆண்டு அலுவலக ஒளிப்படப்பிடிப்பாளர் நண்பர் சுரேந்திரன் ஊடாக சேர்ப்பித்தேன். ஏனென்றால் 1977 இல் கொழும்புக்கு வந்திருந்த தனபாலசிங்கத்திடம் பல ஆண்டுகள் வங்கிக்கணக்கும் இருக்கவில்லை.

1985 ஆம் ஆண்டளவில் தனபாலசிங்கம் ஆங்கில ஆசிரியர்களுக்கான விண்ணப்பத்தை கல்வி அமைச்சு கோரியபொழுது அதற்கு விண்ணபித்துத் தெரிவானார். அத்துடன் அவருக்கு உடனடியாகவே ஆங்கில ஆசிரியர் நியமனமும் கிடைத்தது. ஆனால், ஆசிரிய பீடத்திலிருந்த சிவநேசச்செல்வன், ராஜகோபால், நடராஜா ஆகியோரும் தோழர் சண்முகதாசனும் அதனை விரும்பவில்லை. திறமையுள்ள பத்திரிகையாளனை அவர்கள் இழக்கவிரும்பவில்லை.

அந்த ஆசிரியப்பணிக்குச் சென்றால் பத்தோடு பதினொன்றாக ஆசிரியர் உலகில் காணாமல்போய்விடுவாய் என்றே அவர்கள் அறிவுறுத்தினார்கள். கோழி மேய்த்தாலும் அரசாங்கத்தின் சம்பளத்தில் மேய்க்கவேண்டும் என விரும்பும் யாழ்ப்பாணத்தின் சராசரிப் பெற்றோர்களுக்கிருந்த எண்ணம்தான் அவருடைய தந்தை வீரகத்திக்கும் இருந்தமை இயல்பே.

அவர் பொன். ராஜகோபாலுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு மகனை அந்த ஆசிரிய நியமனத்தை ஏற்கச் சொல்லுமாறு தூண்டினார். எதிர்காலத்தில் ஊடகத்துறையில் தனபாலசிங்கம் பிரகாசிக்கும் சந்தர்ப்பத்தை இழப்பதை தான் விரும்பவில்லை என்றார் ராஜகோபால். அதற்குத் தந்தையார் வீரகத்தி, எங்கே சம்பளம் எடுத்தாலும் ஒன்றுதான். சிங்காரிதான் காவேரி. காவேரிதான் சிங்காரி என்று பாடினார்.

முடிவில் தனபாலசிங்கம் ஆசிரியப் பணிக்குச் சென்று சில நாள்களிலேயே திரும்பி வந்து மீண்டும் பத்திரிகையில் இணைந்தார். இவருடன் ஆங்கில ஆசிரியராக தெரிவாகி, பின்னாளில் துறைமுக அதிகாரசபையின் துணைத்தலைவராக நியமனம் பெற்றவர்தான், பின்னாளில் நான் ஆஸ்திரேலியாவில் அங்கம் வகிக்கும் ஆஸ்திரேலியத் தமிழ் இலக்கிய கலைச் சங்கத்தில் இணைந்துள்ள இப்ரகீம் ரஃபீக்.

1987 இல் நான் ஆஸ்திரேலியாவுக்கு வந்தபின்னரும் நண்பர் தனபாலசிங்கத்துடன் இற்றைவரையில் தொடர்பில் இருக்கிறேன்.

நண்பரின் முதலாவதுநூல் 'ஊருக்கு நல்லது சொல்வேன்' நூல் வெளியீட்டு விழா கொழும்பில் நீதியரசர் விக்னேஸ்வரன் தலைமையில் நடந்தபொழுது என்னையும் வந்து பேசுமாறு அழைத்திருந்தார். கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் மண்டபம் நிறைந்திருக்க நடந்த அந்த வெளியீட்டு அரங்கில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு எம்.பிக்கள் மற்றும் மனோ கணேசன் உட்பட பல ஊடகவி யலாளர்களும் திரளாகக்கலந்துகொண்டனர். தினக்குரலில் தனபாலசிங்கம் தொடர்ந்து எழுதிய ஆசிரியத் தலையங் கங்களின் தொகுப்பு ஊருக்கு நல்லது சொல்வேன். அந்த விழாவில் கலந்து கொண்ட அவருடைய தந்தையார், அன்று தனது மகனை மற்றவர்கள் உள்ளத்தால் சான்றோன் எனக்கேட்ட நிலையில் பெரு மிதத்துடன் இருந்தார். ஆனால், அந்தக் காட்சியைப் பார்ப்பதற்கு தோழர் சண்முக தாசனும் ராஜகோபாலும் இல்லை.

அந்த மேடையில் தனபாலசிங்கம் தன்னை ஊடகத்துறைக்குள் அழைத்த சிவநேசச்செல்வனுக்கும், அரச ஆசிரிய உத்தியோகத்திலிருந்து மீட்டு எடுத்து மீண்டும் பத்திரிகை உலகத்திற்கு அனுப்பிய தந்தையாருக்கும் உரியமுறையில் மரியாதை செலுத்தினார்.

அந்த நூலை புரவலர் புத்தக பூங்காவின் சார்பில் பதிப்பித்து வெளியிட்டவர் புரவலர் ஹாஷிம் உமர். ஆசிரியத் தலையங்கங்களை தேர்வுசெய்து தொகுத்தவர் கலைச்செல்வன். அந்த நூலுக்கு தமிழ் நாடு நாமக்கல் சின்னப்பபாரதி அறக்கட்டளை விருதும் கிடைத்தது.

அதனைத்தொடர்ந்து மற்றுமொரு ஆசிரியத் தலையங்கத் தொகுப்பு நோக்கு என்ற நூலையும் வெளியிட்டார். இதனை கொழும்பு குமரன் புத்தக இல்லம் பதிப்பித்துள்ளது.

90 ஆண்டுகளை நிறைவுசெய்துள்ள வீரகேசரியின் சமகாலம் என்ற அரசியல் விமர்சன இதழின் ஆசிரியராகவும் தனபாலசிங்கம் பணியாற்றினார்.


மல்லிகை ஜீவாவுக்கு 80 வயது பிறந்ததினம் வந்தபோது அவரை வாழ்த்தி தினக்குரலில் விரிவான ஆசிரியத்தலையங்கம் எழுதினார்.

நாம் 2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3 ஆம் திகதி கொழும்பில் சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாடு தொடர்பான ஆலோசனைக்கூட்டம் நடத்தியபோது, அன்றைய தினமும் எமது மாநாட்டை வரவேற்று ஆசிரியத்தலையங்கம் எழுதினார். பின்னர் 2011 ஜனவரி மாதம் 6 ஆம் திகதி மாநாடு தொடங்கியவேளையிலும் ஆசிரிய தலையங்கம் எழுதி எழுத்தாளர்கள் அனைவரையும் ஊக்கப்படுத்தினார்.

தோழர் சண்முகதாசன் நினைவாக சண் முன்னர் எழுதிவைத்திருந்த கார்ல் மாக்ஸ்பற்றிய ஆக்கங்களையும் தொகுத்து வெளியிடுவதில் முன்னின்றார். இவ்வாறு தனபாலசிங்கம் மேற்கொண்ட பணிகளை எழுதிக்கொண்டே போகலாம்.

முன்னர் வீரகேசரியில் எம்முடன் ஒப்புநோக்காளராக பணியாற்றிய நண்பர் பிரணதார்த்திஹரன் பின்னர் தினக்குரல் ஆசிரியபீடத்தில் இணைந்து, சிறிது காலத்தில் செய்தி ஆசிரியராகவும் தற்பொழுது ஆசிரியத் தலையங்கங்களும் எழுதும் பிரதம ஆசிரியராகவும் பணி தொடருகின்றார்.


இவரைப்போன்றே எம்முடன் ஒப்புநோக்காளராக பணியாற்றிய சிவராஜா ஊடகத்துறையில் பணியாற்றுகிறார். முன்னர்




அங்கு அச்சுக்கோப்பாளராக விருந்த நண்பர் நெவில் அந்தனி தற்பொழுது அங்கு விளையாட்டுத்துறை செய்திகள் எழுதும் ஊடகவியலாளராக ஆஸ்திரேலியா முதலான நாடுகளுக்கும் வந்து விளையாட்டுத்துறை செய்திகளையும் கட்டுரைகளையும் எழுதிவருகிறார்.

இந்தத்தகவல்கள் கூறும் வலிமையான செய்தியை இந்தப்பத்தியை வாசிக்கும் வாசகர்கள் புரிந்துகொள்வார்கள்.

ஆற்றலும் உள்ளார்ந்த திறமைகளும் மிக்கவர்கள் சரியாக இனம் காணப்பட்டு, ஆக்கபூர்வமான திசையில் அழைத்துச் செல்லப்பட்டால் அவர்களினால் நாட்டுக்கும் சமூகத்திற்கும்தான் நன்மைகள் அநேகம். எனவே எவரையும் புறம்ஒதுக்காமல், அவரவர் ஆற்றல்களை இனம் கண்டு வளர்த்துவிடவேண்டியது மூத்த தலை முறையினரின் தார்மீகக் கடமையாகும்.




சமூகத்திற்காகப் பேசுவதும் சமூகத்தை பேச வைப்பதும்தான் படைப்பாளிகளினதும் ஊடகவியலாளர்களினதும் பிரதான கடமை என்பதையும் புரிந்துகொண்டு பணிதொடரும் பொழுது, தமது பணிகள் வெற்றுப்புகழாரங்களுக்கானது அல்ல என்ற தெளிவும் உள்ளத்தில் இருக்கவேண்டும்.

நண்பர் தனபாலசிங்கத்தைப்போன்று பல ஆளுமைகளின் வாழ்வும் பணிகளும் இன்றைய தலைமுறைகளுக்கு குறிப்பாக ஊடகத்துறைக்கு வருவதற்கு ஆர்வம் காண்பிப்பவர்களுக்கு பாடநூலாகத்திகழும். ஏனென்றால் நானும் தனபாலசிங்கமும் இந்தன் ஊடகத்தறையில் பிரவேசித்த காலத்தில் கணினி - மின்னஞ்சல் இல்லை, கைத்தொலைபேசி, ஐபேட், ஸ்கைப், முகநூல், டுவிட்டர் என்று எவையும் இருக்கவில்லை. கையில் இருந்தது காகிதமும் பேனையும்தான். ரோய்டரையும், பி.ரி.ஐயையும் வானொலிகளையும் தொலைபேசிகளையும் மாத்திரமே நம்பியிருந்தோம்.

இன்றுபோல் இலகுவான ம்ownload Journalism அன்று இருக்கவில்லை.

இலங்கை பத்திரிகை ஸ்தாபனமும் பத்திரிகை ஆசிரியர் சங்கமும் வழங்கும் 'வாழ்நாள் சாதனையாளர்' விருதையும் தனபாலசிங்கம் பெற்றுள்ளார்.

எனது இனிய நண்பர் தனபாலசிங்கம் விரைவில் பூரண குணமடைந்து பல்லாண்டு வாழவேண்டும் என இந்தத் தொடர் பதிவின் ஊடாக வாழ்த்துகின்றேன்.

(முற்றும்)

# தாந்தாமலையில் இராணுவத்தினருக்காக 1,500 ஏக்கர் காடுகள் சுவீகரிக்க முடிவு!

## சாணக்கியன், கருணாகரம் எதிர்ப்பு



மட்டக்களப்பு பட்டிப்பளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தாந்தாமலை பகுதியில் இராணுவத்தினருக்காக 1,500 ஏக்கர் காடுகளை சுவீகரிக்கும் நடவடிக்கையை முன்னெடுக்கும் யோசனை முன்வைக்கப்பட்ட வேளையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சாணக்கியன், கோ.கருணாகரம் ஆகியோர் இதனை தடுத்து நிறுத்துமாறு அபிவிருத்தி குழுக்கூட்டத்தில் எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர்.

பட்டிப்பளை பிரதேச செயலாளர் பிரிவில் தாந்தாமலை பிரதே சத்திலுள்ள 1,500 ஏக்கர் காடுகளை இராணுவத்தினரின் தேவைக்காக சட்டவிரோதமாக கையகப்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், இன்று இடம்பெற்ற அபிவிருத்திக் குழுக் கூட்டத்தின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சாணக்கியன், கோ.கருணாகரம் ஆகியோர் கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர்.

அத்துடன், குறித்த நடவடிக்கையை உடனடியாகக் கைவிட வேண்டும் எனவும் இருவரும் வலியுறுத்தியிருந்தனர்.

இந்நிலையில் அபிவிருத்திக்குழுவின் இணைத் தலைவரும் இராஜாங்க அமைச்சருமான எஸ்.வியாழேந்திரனும் இவர்களின் எதிர்ப்பு அடங்கிய தீர்மானத்தை ஏற்றுக்கொண்டிருந்தமையுடன், பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானம் எடுக்கப்பட்டதுடன், மாவட்ட அபிவிருத்தி குழுவில் தீர்மானம்எடுப்பதற்காகஅது அனுப்பிவைக்கப்படவுள்ளது.

# நாட்டு மக்களுக்கு நாம் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றினோம்!

## சாகர பெருமிதம்



கொழும்பு, மார்ச் 16

நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை சிறந்த முறையில் நிறைவேற்றியுள்ளோம். அரசாங்கத்துக்கு எதிராக எதிர்த் தரப்பினர் முன்வைக்கும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக நாட்டு மக்கள் புத்திசாலித்தனமானதாக ஆராய வேண்டும் என பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று (திங்கட்கிழமை) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

மக்களின் எதிர்பார்ப்பை பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் இதுவரை சிறந்த முறையில் நிறைவேற்றியுள்ளது. ஒரு சில குறைபாடுகளை நாட்டு மக்கள் சுட்டிக்காட்டியுள்ளார்கள். தவறுகளை திருத்திக்கொண்டுசிறந்தஅரசநிர்வாகத்தை முன்னெடுக்க அனைத்து தரப்பினரது ஒத்துழைப்பும் அவசியமானதாகும்.

அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு எதிர்த் தரப்பினர் அரசாங்கத்துக்கு எதிராகபோலியான குற்றச்சாட்டுக்களை முன்வைக்கிறார்கள். சீனி வரிக் குறைப்பால் எவ்வித நிதி மோசடிகளும் இடம்பெறவில்லை என நிதியமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. வாடிக்கையாளர்கள் நன்மைபெறவேண்டும்என்றநோக்கிலேயே சீனிக்கான இறக்குமதி வரி குறைக்கப்பட்டது.

சுற்றுச் சூழல் அழிக்கப்படுவதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. சுற்றுச் சூழலை பாதுகாக்க கடந்த காலத்தை காட்டிலும் தற்போதே சிறந்த பொறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. அரசாங்கத்துக்கு எதிரான போலிக் குற்றச்சாட்டுக்கள் குறித்து நாட்டு மக்கள் அவதானத்துடன் சிந்திக்க வேண்டும். – என்றார்.

# போதையுடன் தொடர்புடைய மூன்று பேர் கைதாகினார்கள்!



விசேட அதிரடிப்படையினர் மற்றும் பொலிஸார் இணைந்து வெவ்வேறு பிரதேசங்களில் கடந்த ஞாயிற்றுக்கிழமை முன்னெடுத்த சுற்றிவளைப்புக்களில் போதைப்பொருளுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் –

லாவுஹல பிரதேசத்தில் விசேட அதிரடிப்படையினரால் முன்னெடுக்கப்பட்ட சுற்றி வளைப்பில் சுமார் இரண்டரை ஏக்கர் நிலப்பரப்பில் கஞ்சாபயிரிடப்பட்டுள்ளமைகண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பயிரிடப்பட்டிருந்த ஒரு லட்சத்து 70 ஆயிரம் கஞ்சா செடிகள் அழிக்கப்பட்டுள்ளன. இதனுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் தேடப்படுகின்றனர்.

பொரளை பொலிஸாரால் 25 கிராம் ஹெரோயினுடன் பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினரால் மாதம்பிட்டிபிரதேசத்தில் 51 கிராம் ஹெரோயின் மற்றும் 2 லட்சம் ரூபா பணத்துடன் 24 வயதுடைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரிடமிருந்து மீட்கப்பட்ட பணம் ஹெரோயின் விற்பனைக்கூடாக கிடைத்ததாக இருக்கலாம் எனசந்தேகிக்கப்படுகிறது. கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினரால் தெமட்டகொட பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பில் 10 கிராம் ஹெரோயினுடன் 44 வயதுடைய சந்தேகநபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார். – என்றார்.

# ஆடைத்தொழிற்சாலை ஊழியர்களை ஏற்றிச் சென்ற பஸ் கோர விபத்து!



மன்னாரில் இருந்து ஆடைத்தொழிற்சாலைக்கு யுவதிகளை ஏற்றிச் சென்ற பஸ் மடு பொலிஸ் நிலையம் முன்பு நேற்று (திங்கட்கிழமை) காலை குடைசாய்ந்து விபத்திற்கு இலக்காகியுள்ளது.

இந்த பஸ் மன்னாரில் இருந்து மடுவை நோக்கி சென்று கொண்டிருக்கும் போது மடு ரோட் பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக நாய் ஒன்று குறுக்கிட்ட நிலையில் பஸ் பள்ளத்துக்குள் குடைசாய்ந்துள்ளது.

இருந்த போதும் பஸ்ஸில் பயணித்தவர்கள் எவ்வித காயங்களும் இன்றி உயிர் தப்பியுள்ளனர் என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மடு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கடத்தல் மீண்டும் தொடர்வதை அரசாங்கம் அனுமதிக்கின்றதா?

## ஹர்ஷ டி சில்வா கேள்வி



கடத்தல் சம்பவங்கள் மீண்டும் தொடர்வதை தற்போதைய அரசாங்கம் அனுமதிக்கப்போகின்றதா என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா கேள்வியெழுப்பியுள்ளார்.

2015 ஆம் ஆண்டிற்கு முன்னரான யுகத்தை மீண்டும் நினைவுபடுத்தும் வகையில் கடந்த 10 ஆம் திகதி ஊடகவியலாளர் ஒருவர் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய வெளியிட்டுள்ள டுவிட்டரில் பதிவை பகிர்ந்தே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

கறுப்புநிற வானில் ஊடகவியலாளர் ஒருவர் கடத்தப்பட்டு, அவரது செய்தி மூலங்கள் மற்றும் அரசியல் தொடர்புகள் பற்றிய தகவல்களை தெரிவிக்கும்படி சித்திரவதை செய்யப்பட்டு பின்னர் வீதியோரத்தில் தூக்கி எறியப்பட்டிருக்கிறார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்களே, மீண்டும் கடத்தல் சம்பவங்கள் தொடர்வதை நீங்கள் அனுமதிக்கப் போகின்றீர்களா என்ற கேள்வியுடன் குறித்த பதிவை பகிர்ந்துள்ளார்.

இதேவேளை இச்சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் குறித்து உரிய விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என சபாநாயகர் கரு ஜயசூரிய குறிப்பிட்டுள்ளார்.

# தினம் ஒரு விவசாயத் தகவல்

Agriculture Information

## மிளகாயினங்களும் விளைச்சலும்

| | [illegible] |
|---|---|
| MI – 01 | 1.5 t/ha |
| MI – 02 | 2.0 -2.5 t/ha |
| KA – 02 | 2.0 -2.5 t/ha |
| Arunalu | 2.0 -2.5 t/ha |
| MI – Hot | 2.5-3 t/ha |
| MI – Green (2009 Released) | >3t/ha |
| Galkirivagama Selection (2009 Released) | 2.5-3.0 t/ha |

ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி

# ஐ.நாவில் இலங்கைக்கு நாம் எவ்வித அநீதியையும் இழைக்கவே மாட்டோம்!

## அதிகாரப்பற்றற்ற கலந்துரையாடலில் இந்தியா தெரிவிப்பு

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு தாம் அநீதி இழைக்கப் போவதில்லை என்று இந்தியா தெரிவித்துள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை மீதான அதிகாரப்பற்றற்ற கலந்துரையாடலின்போதே, இந்தியா இதனைத் தெரிவித்துள்ளது.

நாம் இலங்கைக்கு எவ்வித அநீதியையும் இழைக்க மாட்டோம் என்று இந்தியப் பிரதிநிதி ஐ.நா. அதிகாரப்பற்றற்ற கலந்துரையாடலில் குறிப்பிட்டுள்ளார் என்று கொழும்பு ஊடகமொன்று இன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதேநேரம், இலங்கை அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என்றும் இந்தியா வலியுறுத்தியுள்ளது.

பிரிட்டன் தலைமையிலான நாடுகள் இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள் சபையில் முன்வைத்துள்ள பிரேரணைக்கு வாக்களிப்பது தொடர்பாக இந்தியா இதுவரையில் எந்தத் தகவலையும் வெளியிட்டிருக்கவில்லை.

இந்நிலையிலேயே இந்தியப் பிரதிநிதி மேற்படி கருத்தை வெளியிட்டுள்ளார்.

அவரின் கருத்துக்கமைய பிரேரணை மீதான வாக்கெடுப்பில் இந்தியா பங்கேற்கமாட்டாது என்பது நிரூபணமாகியுள்ளது என்று கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது.

## கொலைச் சந்தேக நபரின் வீடு வட்டக்கச்சியில் எரிப்பு!



யாழ்ப்பாணம்,மார்ச் 15

கிளிநொச்சி , வட்டக்கச்சி பகுதியில் குடும்பஸ்தரைக் கத்தியால் குத்திக் கொலை செய்தவர் எனக் கூறப்படும்சந்தேகநபரின்வீட்டிற்குத் தீ வைக்கப்பட்டுள்ளதையடுத்து கத்திக்குத்து தாக்குதலில் பலியானவரின் மனைவி மற்றும் சகோதரிகள் மீது பொலிஸார் தாக் குதலை மேற்கொண்டனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 10 ஆம் திகதி வட்டக்கச்சி பகுதியை சேர்ந்த அருளம்பலம் துஷ்யந்தன் என்பவரின் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்த இருவர் அவர் மீது கத்தியால் குத்தியுள்ளனர். இந்தச் சம்பவத்தில் அவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவகளை பொலிஸார் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தினர். சந்தேக நபர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை சந்தேகநபரின் குடும் பத்தினர் பயம் காரணமாக வீட்டை விட்டு வெளியேறி வேறு இடத்தில் தற்காலிகமாக வசித்து வருகின்றனர்.

வீட்டில் உள்ளசில ஆவணங்கள் உள்ளிட்ட பொருள்களை எடுத்து செல்வதற்காக வீட்டார் பொலிஸாரின் பாது காப்புடன் வீட்டிற்கு சென்ற போது, அங்கு ஊரவர்கள் மற்றும் இறந்தவரின் மனைவி, சகோதரர்கள் உள்ளிட்ட உறவினர்கள் கூடி இறந்தவருக்கு நீதி கிடைக்கவில்லை என்றும் பொலிஸார் பக்கச்சார் பாக நடந்து கொள்கின்றனர் என்றும் குற்றம் சாட்டி களேபரத்தில் ஈடுபட்டனர்.

அதனால் அங்கு பதற்றமான சூழல் ஏற்பட்டது. அவ்வேளை சந்தேக நபரின் வீட்டிற்கு தீ வைக்கப்பட்டுள்ளது. அதனை அடுத்து அங்கிருந்தவர்களை பொலிஸார் அப்புறப்படுத்த முற்பட்டு அங்கிருந்தவர்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதில் கொலையானவரின் மனைவி மற்றும் சகோதரிகள் காயமடைந்தனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## புர்காவைத் தடை செய்து முஸ்லிம்களின் உணர்வுகளைக் காயப்படுத்த வேண்டாம்

### அரசிடம் பாகிஸ்தான் தூதுவர் வலியுறுத்து



இலங்கையில் நிகாப் மற்றும் புர்கா மீதான தடை உலகெங்கிலும் உள்ள முஸ்லிம்கள் மற்றும் இலங்கை முஸ்லிம்களின் உணர்வுகளைக் காயப்படுத்தும் ஒரு சம்பவம்.

- இவ்வாறு இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் முஹம்மத் சாத் கட்டாக் தெரிவித்தார்.

தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ள பதிவிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அதில்அவர்மேலும்தெரிவித்துள்ளதாவது:-

இலங்கையில் புர்கா மீதான தடை உலகெங்கிலும் உள்ள முஸ்லிம்களின் உணர்வுகளுக்கும், இலங்கையில் உள்ள முஸ்லிம்களின் உணர்வுகளுக்கும் காயத்தை ஏற்படுத்தும்.

சர்வதேச அரங்குகளில் நாடு எதிர் கொள்ளும் தொற்றுநோய் மற்றும் பிற சவால்களால் பொருளாதாரம் பாரிய நெருக்கடியைச் சந்தித்துள்ள நிலையில், பாதுகாப்பு என்ற பெயரில் இத்தகைய பிளவுபடுத்தும் நடவடிக்கைகள், பொருளாதார சிக்கல்களை அதிகரிப்பதைத் தவிர, அடிப்படை மனித உரிமைகள் குறித்த பரந்த அச்சங்களை மேலும் வலுப்படுத்த மட்டுமே உதவும் - என்றுள்ளது.

தேசியப் பாதுகாப்பு காரணமாக, புர்கா மற்றும் நிகாப் ஆகியவற்றை தடை செய்வதற்கு இலங்கை அரசு நடவடிக்கை எடுத்துள்ளது எனச்செய்திகள் வெளியாகி இருந்த நிலையில், பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர, புர்காவை தடைசெய்யும் அமைச்சரவை பத்திரத்தில் தான் கையெழுத்திட்டார் என்று கடந்த சனிக்கிழமை தெரிவித்திருந்தார்.

அத்துடன், அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த விவகாரம் தொடர்பான ஆவணம் சமர்ப்பிக்கப்படும் எனவும் அவர் கூறியிருந்தார்.

இது இவ்வாறிருக்க, ஹிஜாப்பைத் தடை செய்யும் நோக்கம் எதுவும் அரசி டம் இல்லை எனவும் அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்திருந்தார்.

ஹிஜாப்பால் தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லை என்பதால் அதனைத் தடை செய்யும் நோக்கம் இல்லை எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

எனினும், அனுமதி கிடைத்ததும் புர்காவும், நிகாப்பும் தடை செய்யப்படும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்திருந்தார்.

## வவுனியா நகரசபையால் அதிரடி 125 கட்டாக்காலி மாடுகள் பிடிப்பு

வவுனியா, மார்ச். 15

வவுனியா நகரசபைக்குட்பட்ட பகுதி வீதிகளில் கட்டாக்காலி மாடுகளினால் நகரின் அழகு சீர்குலைவதுடன் போக்குவரத்துக்கும் பல்வேறு இடைஞ்சல்கள் ஏற்படுத்தி வந்த நிலையிலும் இவ்வாறு கட்டாக்காலி மாடுகள் பிடிக்கப்பட்டன.

கட்டக்காலி மாடுகளினால் நகரில் அதிகரிக்கும் வாகன நெரிசல், போக்குவரத்து இடைஞ்சல் மற்றும் விபத்துக்களை குறைக்கும் வகையில் முன்னெடுக்கப்பட்ட இந்த நடவடிக்கையால் 125இற்கு மேற்பட்ட மாடுகள் பிடிக்கப்பட்டுள்ளன.

வவுனியா நகரசபையினரால் வவுனியா நகர், பட்டாணிச்சூர், வேப்பங்குளம், கோவிற்குளம், குருமன்காடு, வைரவப்புளியங்குளம் ஆகிய பகுதிகளில் நேற்றிரவு 4 மணிநேர காலப்பகுதியில் மேற்படி கட்டாக்காலி கால்நடைகள் பிடிக்கப்பட்டு வவுனியா நகரசபை வளாகத்திலும், வேப்பங்குளம் நகரசபை வளாகத்திலும் அடைத்து வைக்கப்பட்டுள்ளன.

மாட்டின் உரிமையாளர்கள் பிடிகூலி 1000 ரூபா, தண்டம் 1000 ரூபா, ஓர் நாள் பராமரிப்பு செலவு 300 ரூபா ஆகியவற்றினை செலுத்தி பெற்றுக்கொள்ள முடியுமெனவும் பராமரிப்பு செலவு நாளாந்தம் 300 ரூபா விதிக்கப்படுமென நகர சபை தெரிவித்துள்ளது.

சமீப காலமாக வவுனியாவில் கட்டாக் காலி மாடுகளால் போக்குவரத்துக்கு பெரும் இடையூறுகள் ஏற்படுவதுடன் பல வீதி விபத்துக்களும் ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (100)

## 'புர்கா'வைத் தடைசெய்வதால் பிரச்சினைகள் உச்சமடையும்!

### சஜித் அணி எச்சரிக்கை

இலங்கையில் புர்காவைத் தடை செய்வதால் தற்போது காணப்படும் பிரச்சினைகள் மேலும் தீவி ரமடையுமே தவிர, அவை ஒரு போதும் தணியப் போவதில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

இலங்கையில் புர்கா விவகாரம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்த ஆரம்பித்துள்ளமை தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:-

மக்களின் ஜனநாயக உரிமையைத் தடைசெய்வதற்கு அரசு முயற்சிக்கிறது. அதன் விளைவாகப் பிரச்சினைகள் தீரப் போவதில்லை. மாறாக பிரச்சினைகள் தீவிரமடையும்.

அரசின் தீர்மானங்கள் நாட்டி லுள்ள பிரச்சினைகளைக் குறைப்ப தற்கு வழி செய்யும் என்று எமக்குத் தோன்றவில்லை.

அதேவேளை, புர்கா என்பது மத ரீதியான தீவிர வாதப் போக்கின் அடையாளமாக இருக்கின்றது என அமைச்சர் சரத் வீரசேகர கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

மேலும், அது குறித்து சரத் வீர சேகர தீர்மானம் எடுக்க முடியாது. என்னுடைய பார்வையில் அவர் தான் தீவிர வாதப் போக்கில் செயற்படுவது போன்று தோன்றுகின்றது.

அத்துடன் அவர் விரும்பும் ஆடை யையே நாட்டுமக்கள் அணிய வேண்டும் என்ற அடிப்படையில் ஒவ்வொருவரும் தமது மத ரீதியான நம்பிக்கையின்படி அணியும் ஆடைகளைத் தடைசெய்வதே தீவிரவாதப் போக்குடைய சிந்தனையாகும் - என்றார்.



## தீ விபத்தால் பாதிக்கப்பட்ட பகுதிக்கு எதிர்க்கட்சித் தலைவர் நேரடி விஜயம்

கொழும்பு, கிராண்ட்பாஸ் - கஜிமாவத்தையில் இன்று அதிகாலை தீ விபத்து இடம்பெற்ற பகுதிக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினர் பாயிஸ் ஆகியோர் நேரடியாகச் சென்று பார்வையிட்டனர்.

அத்துடன், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவருமான மனோ கணேசன் தீயினால் பாதிக்கப்பட்ட பகுதிக்கு நேரடி விஜயம் செய்து அங்குள்ள தற்போதைய நிலை வரம் குறித்து பாதிக்கப்பட்ட மக்களிடம் கேட்டறிந்தார்.

இதன்போது கொழும்பு மாநகரசபை உறுப்பினர்களான பால சுரேஷ், மஞ் சுளா, அமைப்பாளர் பத்மநாதன் ஆகியோரும் பாதிக்கப்பட்ட பகுதிக்குச்சென்று பார்வையிட்டனர்.

கஜிமாவத்தை பகுதியில் சுமார் 250 வீடுகள் உள்ளன எனவும், அதில் சுமார் 50 வீடுகள் தீயில் எரிந்து நாசமாகியுள்ளன எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, தீயைக் கட்டுப்படுத்த சுமார் 10 தீயணைப்பு வாகனங்கள் பயன்படுத்தப்பட்டன என்று தீயணைப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

## பாதுகாப்புச் சபை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஐ.நா பாதுகாப்புச் சபைக்கு கொண்டு செல்லப்படாமலேயே சர்வதேச நீதிமன்றத்தால் மியன்மார் விசாரிக்கப்படுவது போன்று சிறிலங்காவையும் கொண்டு செல்ல வழிகள் இருக்கின்றனர் எனவும், இந்த உண்மைகளை மக்களிடத்தே சுமந்திரன் ஏன் மறைக்கின்றார் என்றும் கேள்வியெழுப்பியுள்ளார்.

மேலும் மனித உரிமைகள் பேரவையின் 46/1 உத்தேச பிரேரணை பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு மிகப் பெரிய ஏமாற்றம் என்றும், அப்பிரேரணையைக் கண்ணை மூடிக் கொண்டு ஆதரித்து கூட்டமைப்பு மக்களுக்குப் பெரும் தூரோகத்தை இழைத்துள்ளதாகவும் இந்த உண்மைகளைதமிழ்மக்கள்விளங்கிக்கொண்டு செயற்பட வேண்டுமென்றும் அவர் கேட்டுள்ளார்.

யாழ். கொக்குவிலில் உள்ள த.தே.ம. முன்னணியின் தலைமை அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன் போது அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்திய உயர்ஸ்தானிகரின் யாழ்ப்பாண விஜயத்தின் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் பத்திரிகையாளர் சந்திப்பை நடாத்தியிருந்தார். அந்த சந்திப்பிலே ஐ.நா. மனித உரிமைகள் பேரவையிலே இப்பொழுது பேசப்படுகின்ற அல்லது தயாரிக்கப்படுகின்ற இலங்கை தொடர்பான 46/1 பிரேரணை குறித்து ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பிய போது அது தொடர்பில் அவர் உண்மைக்கு மாறாக அப்பட்டமான பொய்களைக் கூறியிருக்கின்றார்.

கடந்த 2012 ஆம் ஆண்டிலிருந்து கிட்டத்தட்ட பத்து வருடங்களாக ஐ.நா. மனித உரிமை பேரவை தொடர்பாக தமிழ் மக்களுக்கு பொய்யைச் சொல்லி, தமிழ் மக்களை ஏமாற்றி, பொறுப்புக் கூறல் என்ற விடயத்தை ஓர் அதிகாரமில்லாத ஐ.நா. மனித உரிமை பேரவைக்குள் எப்படி சுமந்திரனும் அவருடைய கூட்டமைப்பும் முடக்கி வைத்திருந்த துரோகச் செயலைச் செய்தனர், அதைத் தொடருகின்ற வகையில் மீண்டும் அவருடைய அந்தப் பொய்க் கருத்துக்களை மக்களை ஏமாற்றுவதற்கு தொடர்ந்தும் கூறிக் கொண்டு வருகின்றார்.

அதிலும் அவருடைய மிக முக்கியமான கருத்தாகக் கூறியிருப்பது என்னவெனில் இந்த மனித உரிமை பேரவையில் உத்தேசித்த 46/1 பிரேரணை மூன்று தமிழ்க் கட்சிகளும் சிவில் சமூகமும் இணைந்து ஐ.நா. மனித உரிமைகள் பேரவையினுடைய தலைவர் மற்றும் உறுப்பு நாடுகள், மனித உரிமை உயர்ஸ்தானிகருக்கு எழுதிய கடிதத்தில் இருக்கின்ற உள்ளடக்கங்கள் இந்தப் பிரேரணையிலே உள்ளடக்கப்பட்டிருப்பது என்பதாகும். அப்படி ஓர் அப்பட்டமான பொய்யைக் கூறியிருக்கின்றார்.

ஆகவே பொறுப்போடு நாங்கள் கூறுவது என்னவெனில் இந்தக் கடிதத்தில் பொறுப்புக் கூறலை ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இருந்து வெளியில் எடுக்க வேண்டுமென்று மிகத் தெளிவாக கூறியிருந்தோம். அவ்வாறு எடுக்கிறது மட்டுமல்ல, உறுப்பு நாடுகள் அந்த பொறுப்புக் கூறல் விடயத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு கொண்டு செல்ல வேண்டும் என்ற அடிப்படையில் அவர்கள் செயற்பட வேண்டும் என்ற விடயத்தையும், இந்த 46 ஆவது அமர்வில் கொண்டவரப் போகின்ற தீர்மானத்திலும் அந்தக் கோரிக்கையையும் சேர்க்க வேண்டும் என்ற வேண்டுகையையும் அனைத்து உறுப்பு நாடுகளுக்கும் விடுக்கப்பட வேண்டுமென்ற அடிப்படையில் அந்தக் கடிதத்தை நாங்கள் எழுதியிருந்தோம்.

அந்த வகையில் ஐ.நா. உறுப்பு நாடுகள் அனைத்தும் பேரவையில் இருக்கின்ற ஒரு நிலையிலே, அதில் 47 நாடுகள் மட்டும்தான் வாக்களிக்கும் உரிமை உள்ள நாடுகளாக இருந்தாலும் கூட, ஐ.நாவில் இருக்கிற அனைத்த நாடுகளும் இந்த பேரவையில் அங்கம் வகிக்கிற நிலையில்தான் அந்தக் கோரிக்கையை அனைத்த நாடுகளுக்கும் விடுக்கப்பட வேண்டுமென்று அந்தக் கடிதத்தில் எழுதியிருந்தோம்.

ஆனால் அந்தக் கடிதத்தில் எழுதப்பட்டதற்கு மாறாக இந்தப் பிரேரணையில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் மூலமோ அல்லது சர்வதேச குற்றவியல் பொறிமுறையொன்றின் ஊடாக மட்டும் தான் பொறுப்புக் கூறல் இலங்கைத் தீவில் நடைபெறும் என்ற விடயம் வலியுறுத்தப்படவில்லை. அது மறைமுகமாகஜ் கூட வலியுறுத்தப்படவில்லை. மாறாக கடந்த 30/1 தீர்மானத்தில் ஓர் உள்ளகப் பொறமுறையில் நம்பிக்கை இல்லை என்ற அடிப்படையில் அவர்களால் ஒரு சரத்தொன்று அதிலே சேர்க்கப்பட்டிருந்தது.

ஆனால் இந்த முறை உள்ளகப் பொறிமுறை இல்லை என்ற அடிப்படையில் எந்தவொரு கருத்தும் இந்தப் பிரேரணையில் பதியப்படாமல், மாறாக மீண்டும் அரசாங்கம்தான் இந்தப் பொறுப்பு கூறல் நடவடிக்கையெள முன்னெடுக்க வேண்டும், அரசாங்கத்திற்குத்தான் அந்தப் பொறுப்பு உள்ளது என்ற அடிப்படையில்தான் இந்தப் பிரேரணை வரையறுக்கப்பட்டிருக்கின்றது.

எம்மைப் பொறுத்தவரையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்த உத்தேசப் பிரேரணை என்பது ஒரு மிகப் பெரிய ஏமாற்றம் என்பது மட்டுமல்ல கடந்த 10 வருடங்களாக பொறுப்புக் கூறலை எதிர்பார்த்து பேராடிக் கொண்டிருக்கிற மக்களுக்கு முதுகில் குத்துகின்ற ஒரு பிரேரணையாகத்தான் நாங்கள் இதனைப் பார்க்கின்றோம். அதிலே எந்தவிதமான சந்தேகமோ அல்லது எந்தவிதமான மாற்றுக் கருத்தும் இருக்க முடியாது.

இந்தளவு நாள்களுக்குப் பிறகும் - அல்லது எத்தனையோ வருடங்களுக்குப் பிறகும் - பொறுப்புக் கூறல் என்ற விடயத்தை சிறிலங்கா செய்ய மறுக்கிறது அல்லது செய்ய முடியாத நிலையில் இருக்கிறது என்று மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரே சொன்னதற்குப் பிறகும் - சிறிலங்காவையே பொறுப்புக் கூறச் சொல்லிக் கேட்பது உண்மையிலையே பாதிக்கப்பட்ட மக்களின் முதுகில் குத்துகிற விஷயம் மட்டுமல்ல, முன்னாலேயே குத்துகிற ஒரு செயலாகத் தான் நாங்கள் பார்க்கின்றோம்.

இந்தத் தீர்மானத்தை கண்ணை மூடிக் கொண்டு ஆதரிக்கச் சொல்லிக் கேட்பவர்கள் அனைவரும் இந்த இனத்திற்கு துரோகம் இழைக்கிறார்கள் என்பதும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு துரோகம் செய்கிறார்கள் என்பதிலும் தமிழ் மக்களுக்கு எந்தவிதமான சந்தேகமும் இருக்கக் கூடாது. அது மட்டுமல்லாமல், இந்த இன அழிப்பைச் செய்த இராணுவத்தையும் அரசியல் தலைவர்களையும் தொடர்ந்தும் காப்பாற்றுகின்ற வகையில் செயற்படுகின்றார்கள். எந்தவிதமான எல்லையும் இல்லாமல் அவர்களைக் காப்பாற்றி அவர்கள் தொடர்ந்தும் ஆட்சி பீடத்தில் பாதுகாப்பாக இருக்கக் கூடிய வகையில் இந்தப் பிரேரணை சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுக்கப் போகின்றது என்பது தான் உண்மை.

இந்த உண்மையை எங்களுடைய மக்கள் என்றைக்கு, எந்தளவிற்கு விளங்கிக் கொள்கிறார்களோ அந்தளவு தூரத்திற்கு நாங்கள் மாற்று வழிகளைத் தேடி, இந்தத் துரோகங்களை செய்து கொண்டிருக்கக் கூடிய தமிழர்களை முற்றிலும் இந்த அரசியல் அரங்கில் இருந்து நிராகரிப்பதற்கு தயாராக வேண்டும். அவ்வாறு செய்யாது விட்டால் இந்த இனம் அழியும் என்பதை தெளிவாக விளங்கிக் கொண்டு அந்த எதிர்காலத்தைச் சந்திப்பதற்கு நாங்கள் தயாராக வேண்டுமென்பதுதான் எங்கள் கோரிக்கை.

இந்த மாதிரியான மோசமான துரோகங்களை இன்றைக்கு நேற்று மட்டுமல்ல 10 வருடங்களுக்கு மேலாக செய்து கொண்டிருக்கின்ற தரப்புக்களை அரசியல் அரங்கில் இருந்த அகற்றி அவர்கள் தமிழ் மக்களின் பெயரைப் பயன்படுத்தி எந்தவிதமான கருத்துக்களையும் தெரிவிக்க முடியாத நிலைமையை உருவாக்காவிட்டால் நாங்கள் தெரிந்து கொண்டு எங்கள் தலையில் மண்ணை அள்ளிப் போடுகின்ற வேலையாகத்தான் அதனைக் கருத வேண்டியிருக்கும்.

இந்தப் பிரேரணையை எதிர்ப்பவர்கள் ராஜபக்ஷ தரப்பின் ஊதுகுழலாகச் செயற்படுபவர்கள், அவர்களின் நிகழ்ச்சி நிரலை நிறைவேற்றுவதற்காகச் செயற்படுபவர்கள் என்று சுமந்திரன் துணிந்து சொல்லியிருக்கின்றார்.

மனித உரிமைகள் பேரவையில் பிரயோசனமில்லை, 2012 ஆம் ஆண்டிலிருந்தே சர்வதேச குற்றவியல் நீதி மன்றத்திற்கோ அல்லது சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயம் ஊடாகவோ இலங்கை சம்பந்தப்பட்ட இனப்படுகொலை குற்றங்கள் விசாரிக்கப்படாமல் மனித உரிமை பேரவையில் நம்பிக்கை வைத்திருக்கிற வரைக்கும் பொறுப்புக் கூறல் நடைபெறாது என்றும் நாங்கள் சொல்லி வருகின்றோம்.

ஏனெனில் பேரவையானது அரசாங்கத்தை மீறி எதுவுமே செய்யாது என்ற விடயத்தை நாங்கள் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்ற அதே வேளையில் பேரவையில் நிறைவேற்றப்படுகின்ற தீர்மானத்தில் பிரயோசனம் இல்லை என்றும் நாங்கள் சொன்னோம். அப்போது சுமந்திரன் அன்றைக்கும் இதே போன்றுதான் சொன்னார். அந்தத் தீர்மானங்களை - அதாவது 2012 ஆம் ஆண்டிலிருந்து நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை எதிர்த்தவர்கள், விமர்சித்தவர்கள் இந்த அரசாங்கத்திற்கு முழுமையாக விலை போய் இந்த அரசாங்கத்தின் நலன்களைப் பேணுகின்றவர்கள் என்ற ஒரு பொய்ப் பிரச்சாரத்தை பத்து வருடத்திற்கு மேலாக் மேற்கொண்டு வந்தவர்.

அத்தோடு, ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரால் 2014 - 2015 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அறிக்கையோடே சர்வதேச விசாரணை என்பது முற்று முழுதாக முடிந்து விட்டது, இனி ஒரு உள்ளகப் பொறிமுறை ஊடாகத்தான் பொறுப்புக் கூறல் என்ற விடயம் முன்னெடுக்கப்படும் எனச் சொன்ன சுமந்திரன், கடந்த ஜனவரி 15 ஆம் திகதி அனுப்பிய கடிதத்தில் அவருடைய அந்தக் கட்சி கையொப்பம் இடுவதால் அவர்கள் பத்து வருடமாகச் சொன்னதும் பொய் என்ற விடயத்தை ஒப்புக் கொண்டிருக்கிறார்.

தங்களுடைய செயல்களில் சம்பந்தன் அந்தக் கடிதத்தில் கையொப்பம் இடுவதோடு பொறுப்புக் கூறல் என்ற விடயம் மனித உரிமைப் பேரவைக்குள்ளால் ஒருநாளும் தமிழர்கள் அடையப் போவதில்லை என்பதை அவர்களாகவே ஒப்புக் கொண்டார்கள். ஆகவே அப்பட்டமான பொய்யைச் சொல்லி இந்த இணத்தை பத்து வருடத்திற்கு மேலாக ஏமாற்றியவர்கள் சுமந்திரனும் கூட்டமைப்பினரும் தான் என்பதை எமது மக்கள் மறந்து விடக் கூடாது.

ஆகவே அன்று முதல் இன்று வரை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மிகத் தெளிவாக எமது மக்களுக்கு கூறிவருவது ஒன்றுதான். அது என்னவென்றால் பொறுப்புக் கூறல் என்ற விடயத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் ஊடாகவோ அல்லது ஒரு சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயம் ஊடாகவோ அல்லது சர்வதேக குற்றவியல் நீதிமன்ற விசாரணை ஊடாகவோ மட்டும்தான் அடையலாம் என்பதே.

அதனைவிட வேறு எந்தவொரு வழியிலம் பொறுப்புக் கூறலை அடைய முடியாது என்பதை தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றோம். இந்த விடயங்கள் தற்போதைய வரைவில் அல்லது கொண்டு வரப்படவுள்ள பிரேரணையில் முற்று முழுதாக புறக்கணிக்கப்பட்டுள்ளன என்பதில் எந்தவிதமான சந்தேகங்களையும் மக்கள் வைத்திருக்கக் கூடாது என்பதை நாங்கள் வலியுறுத்துகின்றோம்.

இன்றைக்கும் ராஜபக்ஷ தரப்பை மட்டுமல்ல, இனப் படுகொலை செய்த அத்தனை இராணுவத்தையும், இந்த இனத்தை அழித்த அத்தனை நபர்களையும் காப்பாற்றிக் கொண்டிருப்பது இந்தத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புதான் என்பதை எமது மக்கள் மிகத் தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும்.

இன்றைக்கு சர்வதேசத்தால் - உலகத்தால் - முதலாவது ஆளாக மதிக்கப்படுகின்ற அதாவது சர்வதேச சட்டங்கள் சம்பந்தமாக மதிக்கப்படுகின்ற உயர்ஸ்தானிகரே சர்வதேச குற்றவியல் நீதிமன்றிற்கு கொண்டு போகலாம், கொண்டு போக வேண்டுமென்று வலியுறுத்தியிருக்கின்ற நிலையில், இந்த கூட்டமைப்பின் பேச்சாளர் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்குக் கொண்டு போக முடியாது என்றும், ஏனென்றால் பாதுகாப்புச் சபையில் வீட்டோ அதிகாரத்தைப் பாவித்து சீனா தடுக்கும் என்றும் சொல்கிறார். அது எந்தளவு தூரத்திற்கு அப்பட்டமான பொய் என்பதையும் எமது மக்கள் விளங்கிக் கொள்ள வேண்டும்.

ஏனென்றால் இலங்கை எந்தளவு தூரத்திற்கு முக்கியம் என்று சீனா பார்க்கிறதோ, அதே போன்று மியன்மாரும் சீனாவிற்கு முக்கியம். ஏனெனில் சீனாவிற்குப் பக்கத்து நாடு இந்த மியன்மார் தான். அவ்வாறு பக்கத்து நாடாக இருக்கக் கூடிய மியன்மாரை நிச்சயமாக சீனா காப்பாற்றியிருக்கும். அப்படியிருக்க மியன்மாரும் இலங்கையைப் போல சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்குரிய ஒரு உறுப்பு நாடு அல்ல. அதாவது ரோம் சாசனத்தில் இலங்கைகயைப் போல மியன்மாரும் கையெழுத்திடவில்லை.

அப்படியிருக்கவும் பாதுகாப்புச் சபைக்குப் போகாமலேயே இன்றைக்கு சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தாலே மியன்மார் விசாரிக்கப்படுகின்றது. இந்த உண்மையை சுமந்திரன் திட்டமிட்டு எமது மக்களிடம் மறைக்கின்றார். ஆகவே மாற்று வழிகள் இருக்கின்றன. சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு, ஒரு விசாரணையை இலங்கை தொடர்பாக நடாத்துவதற்கு பாதுகாப்புச் சபை ஊடாக மட்டும் தான் போய் அடையலாம் என்றல்ல. இன்றைக்கு மாற்று வழிகளையும் உலகம் கண்டறிந்திருக்கிறது.

அப்படியிருக்கவும் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று சொல்லிக் கொண்டு அந்த உண்மையை எம்முடைய மக்களிடமிருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மூடி மறைக்கின்றார்கள். இந்த அரசாங்கத்தை தொடர்ந்தும் காப்பாற்ற வேண்டுமென்ற ஒரே ஒரு நோக்கத்திற்காகவும், வேறு வேறு தரப்புக்களின் நலன்களுக்காகவும் மட்டும் தொடர்ந்தும் இப்படி அவர்கள் துரோகமிழைக்கின்றனர் என்பதை எமது மக்கள் விளங்கிக் கொண்டு எதிர்காலத்தில் தீர்க்கமான முடிவுகளை எடுக்க வேண்டுமென்று நாங்கள் தயவுடன் கேட்டுக் கொள்கிறோம் - என்றார்.

---

## கோட்டாபய திருடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ திருடனாக இருந்ததும் இல்லை. திருடனாக மாறப் போவதும் இல்லை. மக்கள் நம்பிக்கைக்கு அமைய ஜனாதிபதி ஆட்சி புரிகின்றார்.

ரணிலும் சஜித்தும் கள்ளர்கள். இருவரும் பொய் கூறுவதில் சிறந்தவர்கள். வாக்குகளைப் பெறுவதே அவர்களின் நோக்கம். வாக்குகளைப் பெற்ற பின்னர் அவர்கள் மக்களைச் சந்திக்க வருவதில்லை.

கொழும்பில் அறைக்குள் இருந்தே அவர்கள் மக்கள் பிரச்சினையை தீர்த்தனர். யாழ்ப்பாணத்திற்கு அதிகளவு சேவைகளைச் செய்தவர் தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவே.

யானை, யானை என்றார்கள் அதில் எந்தப் புண்ணியமும் இல்லை. தற்போது தொலைபேசி அதிலும் புண்ணியமில்லை. தற்போது தொலைபேசியில் மின் சேமிப்பு இல்லை. அது செயலிழந்துள்ளது.

இப்போது அது வேலை செய்வதில்லை. நாம் மக்களின் பொறுப்பை ஏற்றதுபோல் செயற்படுகின்றோம். ஆகவே, இரண்டு கால் யானையையும் நாம் விரட்டியுள்ளோம். யானை வேலிகளை அமைக்கவுள்ளோம். அதனை எடுத்த எடுப்பில் செய்ய முடியாது. எமது ஆட்சியில் யானை - மனித மோதலுக்கு தீர்வு வழங்கப்படும் - என்றார்.

# யாழில் சொந்தக் கட்டத்தில் கொமர்ஷல் வங்கி









யாழ் கொமர்ஷல் வங்கி யாழ்ப்பாணம் பிரதான கிளை நேற்று முதல் யாழ்ப்பாணத்தில் ஆஸ்பத்திரி வீதியில் புதிதாகக் கட்டப்பட்ட தனது சொந்தக் கட்டடத்துக்கு இடம்மாறியது.

கொமர்ஷல் வங்கியின் தலைவர் முன்னாள் பிரதம நீதியரசர் கே. ஸ்ரீபவன் புதிய கட்டடத் திறப்பிற்கான நினைவுக் கல்லைத் திரை நீக்கம் செய்து வைத்தார்.

பின்னர் கொமர்ஷல் வங்கியின் நிர்வாக இயக்குநர் எஸ்.ரெங்கநாதன், தலைவர் நீதியரசர் கே.ஸ்ரீபவன், சிரேஷ்ட செயலாக்க அதிகாரி சனத் முனதுங்க ஆகியோர் நாடாவை வெட்டி கட்டடத்தைத் திறந்து வைத்தனர். கொமர்ஷல் வங்கியின் பிராந்திய முகாமையாளர் ஆர்.சிவஞானம், வங்கியின் அதிகாரிகள், அலுவலர்கள், வாடிக்கையாளர்கள் எனப் பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.




என்பிளாஷ் சுப்பர் டிடர்யண்ட் நிறுவனத்தின் முகவர் நிறுவனமான IS நிறுவனம் நேற்று (திங்கட்கிழமை) சங்கானை சந்தைக் கட்டடத் தொகுதியில் கோலாகலமாகத் திறந்து வைக்கப்பட்டது. இதில் பிரதம விருந்தினராக சங்கானை பிரதேச செயலாளர் பிறேமினி பொன்னம்பலமும், சிறப்பு விருந்தினராக என்பிளாஷ் சுப்பர் டிடர்யண்ட் நிறுவனத்தின் உரிமையாளர் எஸ். நவநீதனும் கௌரவ விருந்தினராக வலிகாமம் மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் தர்மலிங்கம் நடனேந்திரனும் கலந்து சிறப்பித்தனர்.






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.03.2021 இல் வெளியிடப்பெற்றது.